விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே





சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 19 சனிக்கிழமை (04.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259


நாட்டில் மேலும்

## 3,644 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

கொரோனாத்தொற்று உறுதியான மேலும்3,644 பேர்நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச் 15

வவுனியாவில்

## கோவிட்டால் இருவர் மரணம்

148 பேருக்கு தொற்று

(வவுனியா)

வவுனியாவில் மேலும் 148 பேருக்குகோவிட் தொற்று ஏற்பட் 15

கட்டுப்படுத்த முடியாமல் அதிகரிக்கும் கொரோனா

# செப்ரெம்பர் 13 வரை ஊரடங்கு நீடிப்பு

## ஜனாதிபதி கோட்டாபய அறிவிப்பு



*(கொழும்பு)* நாட்டில் கட்டுப்படுத்த முடியாமல் அதிகரிக்கும் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தற்போது நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

யாழில் தொடரும் கோவிட் அச்சுறுத்தல்

# 24 மணிநேரத்தில் 370 பேருக்கு தொற்று

மேலும் 6 பேர் உயிரிழப்பு

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் கொரோனா வைரஸின் அச்சுறுத்தல் தொடர்ந்த வண்ணம் உள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 370 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு மேலும் 6 பேர் கோவிட்டால் உயிரிழந்துள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிவரையான கடந்த 24 மணிநேரத்தில் 370 கோவிட்-19 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

அவர்களில் 31 பேர் பிசிஆர் பரிசோதனையிலும் 339 பேர் அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையிலும் கண்டறியப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 133 பேரும் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரிபிரிவில் 66 பேரும் யாழ்ப்பாணம் சுகாதார மருத்துவ அதிகாரி 15

மருத்துவர்களின் அனுமதி கிடைத்தவுடன்

# மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி

(கொழும்பு)

மருத்துவ வல்லுநர்களின் அனுமதி கிடைத்தவுடன் பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி போட முடியும் என்று ஜனாதிபதிகோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை 15

## 10 ஆயிரத்தை நெருங்கும் பலிகள்

மேலும் 202 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 202 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரசாங்கத் தகவல் 15

நியூசிலாந்தில்

## கத்திக்குத்து நடத்திய இலங்கையர் சுட்டுப் படுகொலை

03ஆம் பக்கம் பார்க்க

## இராணுவம் என்றால் என்ன என்பதை இனி சிங்கள மக்கள் அறிந்து கொள்வார்கள்

அவசரகால நிலைமை தொடர்பில் நீதியரசர் விக்னேஸ்வரன் அறிக்கை



(யாழ்ப்பாணம்)

“தமக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழ ஆயத்தமாகின்றார்கள் என்பதை அறிந்து கொண்டு அவர்களை அடக்கி ஆள அவசரகாலச் சட்டத்தை உபயோகித்துள்ளார்.

இது சர்வாதிகாரத்திற்கு முக்கியபடி என்பதில் எந்த 15

## தையிட்டியில் மோ.குண்டு கண்டுபிடிப்பு

(அராலி)

பலாலி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தையிட்டி பகுதியில் உள்ள காணி ஒன்றிலிருந்து மோட்டார் குண்டு ஒன்று நேற்றையதினம் கண்டு 15

யாழ்.போதனா பரிசோதனைகளின்படி

## முல்லையில் 73 பேர் உட்பட வடக்கில் 126 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் 73 பேர் உட்பட வட மாகாணத்தில் மேலும் 126 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 438 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரி 15

## டிசம்பர் மாத இறுதிவரை இலங்கையில் கொரோனா மரணங்கள் அதிகரிக்கும்

வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

டிசம்பர் மாத இறுதிவரையில் மிகப்பெரிய சவாலுக்கு நாம் முகங்கொடுக்க நேரும் எனவும் இலங்கையில் மரண அச் சுறுத்தல் இருக்கும் எனவும் இலங்கையின் ஆய்வாளர்கள் மற்றும் வைத்திய நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

கோவிட் வைரஸ் பரவல் நிலைமையைக் கடக்கும் கட்டத்தில் நாம் 15

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் நடன பாட ஆசிரியை
திருமதி **சோபனா சுதாகரன்** அவர்களின்
அன்புத் தந்தையாரும் நாடக பாட ஆசிரியர்
திரு. **கி.சுதாகரனின்** மாமனாருமாகிய

திரு.

**பொன்னம்பலம் நந்தகுமார்**

அவர்களின் பிரிவினால் தவிக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விசாரா ஊழியர் நலன்புரிச் சங்கம்
யா/இணுவில் மத்திய கல்லூரி

(7659)


## கொரோனாத் தொற்றினால் இராணுவ பிரிகேடியர் பலி

(கொழும்பு)

கோவிட் வைரஸுக்கு சிகிச்சை பெற்று வந்த இராணுவப் பிரிகேடியர் டி.உதயசேன (53) நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு அறிவியல் பீட மருத்துவமனையில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அவர் உயிரிழந்ததாக இராணுவம் தெரிவித்துள்ளது.

பிரிகேடியர் டி.உதயசேனா 31 வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


# இதய அஞ்சலி



பேராசிரியர் கலாநிதி

**கார்த்திகேசு சித்திரவடிவேலு**

பிறப்பு : 17.05.1933 இறப்பு : 03.09.2021

யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை விலங்கியல்,
மீன்பிடியியல் துறை பேராசிரியரும்
தொண்டைமானாறு வெளிக்கள நிலைய தாபித
உறுப்பினரும் ஆராய்ச்சித் துறை பொறுப்பாளருமான
கலாநிதி **கா.சித்திரவடிவேலு** அவர்களின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! (C-2612)

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம்**



# கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக முன்னாள்
விலங்கியற்துறை, தாவரவியற்துறை
தலைவரும் கடலகவள
அபிவிருத்தி நிலைய
பணிப்பாளரும் தொண்டைமானாறு
வெளிக்கள நிலைய ஸ்தாபக
உறுப்பினருமான

**ஓய்வுநிலைப் பேராசிரியர்**

**கார்த்திகேசு சித்திரவடிவேலு**

அவர்கள் இறைபதமடைந்த
செய்தியறிந்து துயரடைவதுடன்
அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 17.05.1933

இறப்பு 03.09.2021

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்...
நீருயிரினவள தொழில்நுட்பவியல்
ஆசிரியர்கள்

(7818)



# மரண அறிவித்தல்



தோற்றம் 29 – 09 – 1944

மறைவு 03 – 09 – 2021

## திரு. வேலுப்பிள்ளை கனகசபை
( இளைப்பாறிய அதிபர் )

பயிரிக்கூடல் காரைநகரைப் பிறப்பிடமாகவும் வாரிவளவு காரைநகர், நட்டாங்கண்டல் மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை கனகசபை நேற்று (03.09.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாதேவியின் (பூசணி) அன்புக் கணவரும் நிரஞ்சன், ஜெனார்த்தனன், ஜமுனா, பிரதீபா ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவந்தினி, கிருபாலினி, ஜெயதீபன், ரவிசங்கர் ஆகியோரின் அன்பு மாமனாரும் பேரம்பலம், பரமேஷ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் நயனி, புவீனா, ராகவி, அக்ஷயா, மானஸ்விகா, நிலவன், ஓவியா, அகஸ்தியன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**நிரஞ்சன்** (மகன்) +61405712626.
**ஜெனார்த்தனன்** (மகன்) 076 804 6149, 077 160 6437
**ஜமுனா** (மகள்) +61430042133, **பிரதீபா** (மகள்) +16478322073

10/2, Champion Lane,
Kokuvil, Jaffna.

தகவல்:-
குடும்பத்தினர்
(மனைவி, பிள்ளைகள்)



# மரண அறிவித்தல்



தோற்றம் 13 – 09 – 1957

மறைவு 29 – 08 – 2021

## பேராயிரம்பிள்ளை இளமுருகன்
( B.Sc, PGDE, LLB, Attorney - At - Law and Notary Public
சட்டத்தரணி, ஓய்வுபெற்ற ஆசிரியர் )

மஞ்சத்தடி இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கந்தசாமி கோவிலடி இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட பேராயிரம்பிள்ளை இளமுருகன் கடந்த 29.08.2021 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேராயிரம்பிள்ளை - பரமேஸ்வரி தம்பதியரின் ஏக புத்திரன் ஆவார்.

அன்னார் முன்னைநாள் ஆசிரியரும் ( நு/சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம், யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, யா/ கோண்டாவில் றோ.க.த.க பாடசாலை, யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாசாலை, கொட்டாஞ்சேனை சென். பற்றிக்ஸ் கல்லூரி - கொழும்பு, யா/ உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) சட்டத்தரணியும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

கந்தசாமி கோவிலடி,
இணுவில் மேற்கு.

0041793322569
077 645 0333

தகவல்:-
குடும்பத்தினர்

# மேலும் இரண்டு வாரங்கள் நாட்டை முழுமையாக மூட வேண்டும்

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல




(கொழும்பு)

**நாடு முழுவதும் தற்போது அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தின் சாதகமான விளைவுகளைக் காண வேண்டுமானால் முடக்க நிலையை மேலும் இரண்டு வாரங்களுக்கு நீடிக்க வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.**

மக்கள் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றினால் தொற்று நோயாளர் தொகையைக் கட்டுப்படுத்தி, ஒக்டோபர் இறுதிக்குள் நாட்டை மீண்டும் திறக்க முடியும் எனவும் நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கையில் மூன்றாவது பூஸ்டர் தடுப்பூசியை வழங்குவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் தொற்று நோயாளர் தொகை தீவிரமாக அதிகரித்து வருவதற்குக் டெல்டா திரிபு நாடெங்கும் பரவியுள்ளமையே இதற்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்தார். (ரி-5)

## கத்திக்குத்து தாக்குதலை நடத்திய இலங்கையர் நியூஸிலாந்து பொலிஸாரால் சுட்டுக்கொலை

(ஒக்லண்ட்)

நியூஸிலாந்து பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நியூஸிலாந்தின் - ஒக்லண்ட் நகரில் அமைந்துள்ள லீன்மால் என்ற பிரபல பல்பொருள் அங்காடியிலேயே நேற்று இந்த துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.

இந்த சிறப்பு அங்காடியில் இருந்த ஆறு பேரை திடீரென கத்தியால் குத்தி காயப்படுத்திய நிலையிலேயே இலங்கையர் ஒருவர் அந்நாட்டு பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அங்காடியில் இருந்தவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டு 6 செக்கனுக்குள் தாக்குதல்தாரி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார்.

குறித்த இலங்கையர் 2011 ஆம் ஆண்டு முதல் சுமார் 10 ஆண்டுகளாக நியூஸிலாந்தில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் ஐ.எஸ் அமைப்பின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டதன் காரணமாகவே கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டார் எனவும் குறித்த நபர் 5 ஆண்டுகளாக அந்நாட்டு அரசாங்கத்தின் கண்காணிப்பிற்குட்பட்டிருப்பதாகவும், இதுவொரு பயங்கரவாத தாக்குதலாகும் எனவும் நியூஸிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆடெர்ன் தெரிவித்துள்ளார். (ரி-5)

## மொத்த வியாபாரத்தில் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும்

### வாசுதேவ நாணயக்கார

(கொழும்பு)

மொத்த வியாபாரத்தில் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென நீர் விநியோக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

மோசடிகளில் ஈடுபடும் வர்த்தகர்களின் பிடியிலிருந்து மக்களை மீட்டு எடுப்பதற்கு அரசின் தலையீடு அவசியம் என அவர் தெரிவித்தார்.

காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக அவர் ஊடகங்களிடம் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது மேலும் கூறுகையில், சில வர்த்தகர்கள் தாங்கள் விரும்பியவாறு பொருட்களின் விலைகளை நிர்ணயித்து விற்பனை செய்து வருகின்றனர்.

நாடு முடக்கப்பட்டுள்ள பின்னணியில் இந்த நிலைமை மேலும் மோசமடைந்துள்ளது.

மொத்த வியாபாரப் பொறிமுறையை உரிய முறையில் ஒழுங்குபடுத்தினால் நுகர்வோருக்கு நலன்களை வழங்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ரி-5)

## யாழில் வீடொன்றில் தீ விபத்து; பல இலட்சம் பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து நாசம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையாக உள்ள மேல்மாடி வீடொன்றில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

குறித்த சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல்- 11 மணியளவில் இடம்பெற்றது.

குறித்த வீட்டில் வசித்து வந்தவர்கள் வீட்டின் சுவாமி அறையில் விளக்கேற்றி விட்டு வெளியே சென்றிருந்த நிலையில் குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.





மாநகர சபையின் தீயணைக்கும் பிரிவினர் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

இதேவேளை, மேற்படி சம்பவத்தில் குறித்த வீட்டில் வைக்கப்பட்டிருந்த பெறுமதியான பல பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதாகவும் தெரியவருகிறது. (ரி-5-18-33)

## உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு கமக்கார அமைப்பினால் நந்தாவில் வயல் வெளியில் பயிர்களுக்கு சேதங்களை ஏற்படுத்தி வந்த வெள்ளை நிற 3 வயது மதிக்கத்தக்க கட்டாக்காலி மாடு ஒன்று நேற்று முன்தினம் பிடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இதனை எவரும் உரிமை கோரவில்லை உரிமையாளர்கள் இருப்பின் மூன்று நாட்களுக்குள் 021 222 6834 எனும் கமநல சேவைகள்நிலைய தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு நல்லூர் கமநல சேவைகள் நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (4-7)

# ஹேராலி, தாகூர் அரைசதம் முதல் நாள் முடிவில் இந்தியா 191



இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி, ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில், மூன்று போட்டிகள் முடிந்துள்ள நிலையில், இரு அணிகளும் தலா ஒரு வெற்றிபெற்று 1-1 என சமநிலையில் உள்ளன. ஒரு டெஸ்ட் டிராவில் முடிந்தது. 4ஆவது டெஸ்ட் லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கி நடைபெறுகிறது.

டொஸ் வென்ற இங்கிலாந்து அணி கப்டன் ஜோ ரூட் பந்து வீச்சை தேர்வு செய்தார். முதலில் பட்டிங் செய்த இந்திய அணியின் ரொப் ஓடர் பட்ஸ்மேன்கள் நிலைக்கவில்லை. ரோகித்சர்மா 11 ரன்கள், கே.எல். ராகுல் 17 ரன்கள், புஜாரா 4 ரன்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர். அதன்பின்னர் கப்டன் கோலி-ரவீந்திர ஜடேஜா இருவரும் நிதானமாக விளையாடினர்.

ஜடேஜா 10 ரன்களில் ஆட்டமிழக்க, கப்டன் கோலி அரை சதம் அடித்த நிலையில், ராபின்சன் ஓவரில் விக்கெட்டை இழந்தார்.

இந்த நெருக்கடியான நேரத்திலும் நேர்த்தியாகவும் அதிரடியாகவும் ஆடிய ஷர்துல் தாகூர், 31 பந்துகளில் அரை சதம் அடித்து நம்பிக்கை அளித்தார். ஆனால், அவர் 57 ரன்கள் எடுத்த நிலையில், துரதிர்ஷ்டவசமாக வோக்ஸிடம் விக்கெட்டை இழந்து வெளியேறினார்.

அதன்பின்னர் பும்ரா (0), உமேஷ் யாதவ் (10) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, இந்திய அணி முதல் இன்னிங்சில் 191 ரன்களில் ஓல் அவுட் ஆனது. இங்கிலாந்து தரப்பில் ராபின்சன் 3 விக்கெட், ஒக்ஸ் 4 விக்கெட் வீழ்த்தினர். (4-6)

# அஸ்வின் இடம்பெறாதது குறித்து வீரர்கள் பலர் அதிருப்தி

இங்கிலாந்துக்கு எதிரான 4 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் இந்திய அணியின் ஆடும் லெவனில் சுழற்பந்து வீச்சாளர் ரவிச்சந்திரன் அஷ்வினுக்கு மீண்டும் வாய்ப்பு கிடைக்கவில்லை. இந்த போட்டி நடைபெறும் ஓவல் மைதானத்தின் பிட்ச், 4 ஆவது மற்றும் 5 ஆவது நாளில் சுழற்பந்து வீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அஷ்வின் அணியில் சேர்க்கப்படவில்லை. இது ரசிகர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளது. முன்னாள் வீரர்கள் மற்றும் கிரிக்கெட் வல்லுநர்களும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இந்த போட்டியிலும் அஸ்வின் சேர்க்கப்படாதது குறித்து முன்னாள் வீரர் மைக்கேல் வாகன் அதிருப்தி தெரிவித்துள்ளார். இந்திய அணியில் அஸ்வின் சேர்க்கப்படாதது மிகப் பெரும் தவறு, இது பைத்தியக்காரத்தனமான முடிவு என்று காட்டமாக கூறிஉள்ளார் வாகன்.



இதேபோல் அஸ்வினை இந்த போட்டியில் சேர்க்காதது வியப்பை அளித்ததாக முன்னாள் வீரர்கள் லிசா ஸ்தலேகர், டாம் மூடி ஆகியோர் கூறி உள்ளனர்.

ஓவல் ஆடுகளம் சுழற்பந்து வீச்சுக்கு சாதகமாக இருக்கும் நிலையில், அஷ்வின் பெயர் விடுபட்டதை தன்னால் நம்ப முடியவில்லை என காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சசி தரூர் கூறியுள்ளார். அஸ்வின் மற்றும் முகமது ஷமி ஆகியோரை சேர்க்காததன் மூலம் தோல்வியை தழுவ விரும்புவது போல் தெரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-6)

# 4 வது இருபது-20; அயர்லாந்து வெற்றி

ஜிம்பாப்வே, அயர்லாந்து அணிகளுக்கு இடையே 5 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடர் நடைபெற்று வருகிறது. முதல் போட்டியில் ஜிம்பாப்வே, 2ஆவது மற்றும் 3ஆவது போட்டியில் அயர்லாந்து அணிகள் வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 4ஆவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டொஸ் வென்ற ஜிம்பாப்வே அணி முதலில் பந்து வீசை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட் செய்த அயர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 174 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து, 175 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஜிம்பாப்வே அணி களமிறங்கியது. ஆனால் அயர்லாந்து அணியினரின் துல்லிய பந்துவீச்சில் ஜிம்பாப்வே அணி சிக்கியது. சீரான இடைவெளியில் விக்கெட்டுகள் வீழ்ந்தன.

இறுதியில், ஜிம்பாப்வே அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 110 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம் 64 ரன்கள் வித்தியாசத்தில் அயர்லாந்து அபார வெற்றி பெற்றது. (4-6)

# பரா ஒலிம்பிக்கிலும் சீனா ஆதிக்கம்

16 ஆவது பரா ஒலிம்பிக்கின் பதக்கப்பட்டியில் ஆரம்பம் முதல் தற்போது வரை சீனாவே ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

சீனா இதுவரை 76 தங்கம், 45 வெள்ளி, 43 வெண்கலம் என மொத்தமாக 164 பதக்கங்களைப் பெற்று முதலிடத்திலிருந்து வருகிறது. ஒரு தங்கப் பதக்கம், ஒரு வெண்கலப் பதக்கத்துடன் 53 ஆவது இடத்திலுள்ளது இலங்கை. (4-6)

# அமெரிக்க ஓபன் டென்னிஸ் மூன்றாவது சுற்றில் ஜோகோவிச்



கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 2 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவை சேர்ந்த நோவக் ஜோகோவிச்சும், நெதர்லாந்தை சேர்ந்த டாலன் கிரீக்ஸ்பூரும் மோதினர்.

ஆரம்பம் முதலே ஜோகோவிச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். முதல் செட்டை 6-2, இரண்டாவது செட்டை 6-3, மூன்றாவது செட்டை 6-2 என கைப்பற்றி அசத்தினார்.

இறுதியில், ஜோகோவிச் 6-2, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வென்று மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.(4-6)

# தென்னாபிரிக்காவை தோற்கடித்து தொடரில் இலங்கை முன்னிலை



தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்று 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் 1-0 என முன்னிலைபெற்றுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது.

அந்தவகையில் நேற்று முன்தினம் கொழும்பு ஆர். பிரேமதாஸ விளையாட்டரங்கில் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 300 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இலங்கை அணி சார்பாக அவிஷ்க பெர்னாண்டோ 118 ஓட்டங்களையும் சரித் அசலன்க 72 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

301 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 286 ஓட்டங்களை பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

தென்னாபிரிக்க அணி சார்பில் துடுப்பாட்டத்தில் எய்டன் மக்ரம் 96 ஓட்டங்களை அதிகபடியாக பெற்றுக்கொடுத்தார். (4-6)

# இராசிபலன்

04.09.2021
ஆவணி 19, சனிக்கிழமை
துவாதசி முற்பகல் 7.36 மணிவரை
பூசம் மாலை 5.57 மணிவரை
சுபநேரம் 3.05- 4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சந்திராஷ்டமம்-பூராடம், உத்தராடம்
சனிப்பிரதோச விரதம்

வள்ளுவன்


மேஷம்

தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பெற்றோர் மீதான பாசம் கூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப விரயங்கள் கூடும் நாள்.


ரிஷபம்

நாடி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழ்வீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


மிதுனம்

உறவினர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.


கடகம்

ஆழ்ந்த சிந்தனையுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், போசன நன்மையுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


சிம்மம்

திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படைவீர்கள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்க முற்படுவீர்கள், சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள்.


கன்னி

வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.


துலாம்

நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், எதிர்பாராத தனவரவுகள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


விருச்சிகம்

எதிர்பாராத காரியமொன்று இன்று நடைபெறும் வாய்ப்புண்டு, எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.


தனுசு

நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம், பொறுமையாக நடந்து அமைதிகாண வேண்டிய நாள், முயற்சிகளில் சுணக்கம் ஏற்படலாம்.


மகரம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், புதிய பொருட்சேர்க்கையுண்டு, செய்தொழிலில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.


கும்பம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


மீனம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும் நாள்.

அனுபவம் ஓர் அழகான ஆன்மிகக் கண்ணாடி

# அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளின் கொள்திறன் உச்ச மட்டத்தை எட்டியது

(கொழும்பு)

**மருத்துமனைகளில் உள்ள அதிதீவிர சிகிச்சை பிரிவுகளின் கொள்திறன் உச்சமட்டத்தை எட்டியுள்ளதாக சுகாதாரத் தரப்பினர் தெரிவித்தனர்.**

நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்களின் அதிகரிப்பினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, சுகாதார வழிமுறைகளை உரியவாறு பின்பற்ற வேண்டும் என இராஜாங்க அமைச்சர், விசேட மருத்துவ நிபுணர் சுதர்ஷனிபெர்னாண்டோ புள்ளே அறிவுறுத்தினார்.

மருத்துமனைக்கான மனித வளப் பற்றாக்குறையும் காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

நாளாந்தம் சுமார் 4 ஆயிரம் நோயாளர்கள் பதிவாவதுடன், 200இற்கும் மேற்பட்ட மரணங்கள் பதிவாவதாகவும் இதனால் நோய்த் தொற்று நிலை தொடர்ந்தும் அபாயகரமானதாகவே காணப்படுவதாகவும் சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே குறிப்பிட்டார்.

ஒட்சிசன் தேவை காணப்படுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதுடன், நாட்டில் தற்போது டெல்டா கொரோனா பிறழ்வே அதிகமாக பரவி வருவதாகவும் தெரிவித்தார். (நி-5)

# பயங்கரவாத சட்டத்தை பார்க்கிலும் அவசரகாலச் சட்டம் மோசமானது

## பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

(மன்னார்)

மக்களை ஏமாற்றுகின்ற செயற்பாடுகளை அரசாங்கம் செய்யக்கூடாது எனவும் மக்கள் தற்போதைய அரசாங்கம் மீது நம்பிக்கை இன்றி உள்ளனர் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் அவசர காலச்சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இராணுவத்தினருடைய அதிகாரங்களை இராணுவத்திற்கு வழங்கி இப்போதுள்ள போராட்டங்கள் ஜனநாயக ரீதியாக இடம்பெறுகின்ற போதும்,போராட்டத்தில் ஈடுபடுகின்றவர்களை கைது செய்வதற்கான ஒரு அத்திபாரமாக இந்தச் சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

ஜனநாயக நாடு என கூறிக் கொண்டு ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்துவதற்கான அத்திபாரத்தை இந்த சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி நிரூபித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை பார்க்கிலும் அவசர கால சட்டம் அன்றாடம் குரல் கொடுக்கின்ற எமது மக்களின் குரல் வளையை நசுக்குகின்ற ஒரு சட்டமாக அமைந்துள்ளது. எனவே மக்களை பாதிப்புக்குள்ளாக்குகின்ற அவசர காலச்சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். ஜனநாயக நாட்டில் மக்கள் சுதந்திரமாக செயற்பட வழி முறைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

அவசரகாலச் சட்டம் மிக மோசமானது.ஜனநாயக ரீதியில் போராடுகிறவர்களை கைது செய்வதற்கான சட்டமாகவே இச்சட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என மேலும் அவர் தெரிவித்தார். (7-4-6-285)

# மயானத்திற்கு அருகில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு தொகுதி கேரளக் கஞ்சா மீட்பு

(மன்னார்)

மன்னார் பேசாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றோமன் கத்தோலிக்க மயானத் திற்கு பின் பகுதியில் மறைத்து வைக்கப்பட்ட ஒரு தொகுதி கேரளக் கஞ்சா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

பேசாலை மயான பகுதியின் பின்புறம் உள்ள காணி ஒன்றில் சூட்சுமமான முறையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த மேற்படி 51 கிலோ 250 கிராம், கேரளக் கஞ்சா போதைப்பொருளே பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேற்படி கைப்பற்றப்பட்ட கஞ்சா மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் கடத்தலுடன் சம்மந்தப்பட்டவர்கள் மற்றும் கடத்தல் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (7-4-6-285)



யாழ்.தீவகம் சுருவிலை சேர்ந்த சவரிமுத்து பவுண்டேசனால் ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலைக்கு வெண்டிலேட்டர் உட்பட சுமார் 81 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் இளவாலை மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி சிஜிஜெயக்குமார் கலந்து கொண்டு மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்தார்.

## அபிவிருத்தி தொடர்பில்
# சாவகச்சேரி நகருக்கு அதிகாரிகள் கள விஜயம்



(சாவகச்சேரி)
நாட்டில் நூறு நகரங்களை பல் பரிமாண நகரமாக்கும் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் முன்மொழியப்பட்ட இடங்களில் ஒன்றான சாவகச்சேரி நகருக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை துறைசார் அதிகாரிகள் கள விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.

பலபரிமாண நகரத் திட்டத்தில் சாவகச்சேரி நகர் இரண்டு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அபிவிருத்திசெய்யப்படவுள்ளது. குறித்த திட்டத்தின் கீழ் தென்மராட்சியில் சாவகச்சேரி, கொடிகாமம் மற்றும் நாவற்குழிஆகிய மூன்று நகரங்கள் தெரிவு செய்யப்பட்டு பல் பரிமாண நகரமாக மாற்றமடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7-30)

# கொக்குவிலில் சுற்றிவளைப்பு
## வன்முறைக்கும்பலின் மோ.சைக்கிள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையின் போது , வன்முறைக்கு பயன்படுத்தியதாக சந்தேகிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண குடாநாட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்முறை சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் அவ்விடங்களில் பதுங்கியிருப்பதாக கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று அதிகாலை 4 மணி முதல் காலை 8 மணிவரை நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரால் கொக்குவிலின் ஒரு பகுதியை சுற்றிவளைத்து, சந்தேகத்திற்கிடமான வீடுகளில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போதே வன்முறைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊடரங்கு வேளைகளில் வாள் வெட்டு சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அதிகமாக அரங்கேறி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7-33-18)



யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசுவாமி கோவில் தண்டாயுதபாணி உற்சவம் நேற்று காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (படம் :- சிவஙாந்தன்)



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராக வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி நேற்று வெள்ளிக்கிழமை காலை மீண்டும் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.
(படம்:- ரவீஙந் சிவஙாந்தன்)

# இணையவழி கற்கை நெறி

(யாழ்ப்பாணம்)
ஆன்மீகப்பிரசாரகர் பட்டயக் கற்கை நெறிக்கான ZOOM வகுப்பு இன்று மாலை 4 மணிக்கும் தொடர்ந்து 6.30 மணிக்கும் நாளை காலை 7 மணிக்கும் தொடர்ந்து இரவு 7 மணிக்கும் நடைபெறவுள்ளது.

குறித்த வகுப்பில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வட மாகாண பிராந்திய அலுவலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்துரன் அறிவித்துள்ளார். இவ் வகுப்பில் கலந்து கொள்வதற்கான ZOOM ID- 4185518916 கடவுச் சொல் senthuran2 ஆகும். (4-7-6)




# தீவனங்களின் விலை அதிகரிப்பால் கால்நடை வளர்ப்பாளர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
கால்நடை தீவனங்களின் விலை அதிகரிப்பினால் கால்நடை வளர்ப்போர் நஷ்டங்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

தற்போது சந்தையில் பால்மாக்கான தட்டுப்பாடுகள் நிலவுவதனால் , பாலுக்கான கேள்வி அதிகரித்துள்ள போதிலும் , தீவன விலையேற்றத்தால் தாம் நஷ்டங்களையே எதிர்கொண்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் தெரிவிக்கையில் கடந்த ஜனவரி மாத கால பகுதியில் 2000 ரூபாய் முதல் , 2200 ரூபாய் வரையில் விற்பனையான தீவனங்கள் தற்போது 3700 ரூபாய்க்கும் அதிகமான விலைக்கு விற்கப்படுகின்றன. சில இடங்களில் தீவனங்களுக்கு தட்டுப்பாடும் நிலவுகின்றன. அவ்வாறான நிலையிலையே கால் நடைக்கான தீவனங்களை வாங்கி கால் நடைகளுக்கு வைக்கிறோம்.

எனவே அரசாங்கம் பண்ணையாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தி தீவன விலையேற்றத்தை கட்டுப்படுத்தி , குறைந்தவிலையில் தீவனத்தை வற்றுக்கொள்ள ஆவண செய்யுமாறு பண்ணையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-7-33)




# நாம் வணங்க எழுந்திடுவாய்

சப்பைரதமெனும் சப்பரமேறும் சண்முகா
இப்புவியில் தப்பொன்றுமில்லா - அடியவர்
துயர் நீக்கிடுவாய்
தொப்பையப்பன் தம்பியே - தொழுது
உனை வணங்கும் அடியவர் நாம்
அழுது உனை நிதம் வேண்டுகின்றோம்
தொற்று வியாதியை துரவே - துரத்தி
உன்பதம் தொழவே - நல்லூர்
வீதியில் யாம் வணங்க எழுந்திடுவாய்

ப.பாலசுப்பிரமணியம்
வேலணை பாலா ஜே.பி

# முக்தியளிப்பாய் முருகா

ஆனந்தமான ஆறுமுகனே
ஆனந்தமான ஆறுமுகனே
இருமைகளை நீக்கி - உன்
நாத இசையில் திளைத்த
எமக்கு உய்ய வழிகாட்டும் அழகனே
அடியாரை அருட்கடலிலே ஈடேற்றும் - கந்தா
மும்மலங்களை அழித்து
முக்தியளிப்பாய் ஆறுமுகனே

சிவதர்சினி

## ஆறுமுகம் கொண்டு ஆண்டருள் நல்லூரா

மாறுமுகம் கொண்டு தீண்டும் தீநுண்மிதன்
அழியேன்
நீறுமுகம் கொண்டுவேண்டும் நின் ஐயேன்
ஏறுமுகம் கொண்டு ஏற்றும் எம் சேயோன்
ஆறுமுகம் கொண்டு ஆண்டருள் நல்லூர்
நேயோன்

மருத்துவர் சி.யமுனாநந்தா

# அலங்காரக் கந்தனவன்

அலங்காரக் கந்தன் நல்லை கந்தன்
அடியார்க்கு அருள் புரிந்திடுவான்
இன்னல்களை தீர்த்திடும் இளங்குமரன்
உள்ளம் உருகும் அடியார்களில் உறைந்திடுவான்
உன் நாமம் ஓதியும்
பண்கனிந்த பாடல்களை பாடி
உன் திருவடியை சரண் அடைந்தோம்
நலங்கள் யாவும் கிடைத்திட
அருள்புரிவாய் நல்லைக்குமரா

லோ.சிந்துகௌரி
உரும்பிராய்

# இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்கான வரியை அதிகரிக்குமாறு கோரிக்கை



(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்திற்காக விதிக்கப்பட்டுள்ள வரியை அதிகரிக்குமாறு உள்ளூர் பெரிய வெங்காய உற்பத்தியாளர்கள் கோருகின்றனர்.

தங்களது அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காய இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள 25 சதம் என்ற வரியை மேலும் அதிகரிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தங்களது உற்பத்திக்கு 70 முதல் 80 ரூபா வரையில் விலை இருந்தாலும்கூட, சந்தையில் அந்த விலைக்கு தங்களது உற்பத்திகளை கொள்வனவு செய்யாமல், அதனை விடவும் குறைந்த விலையில் சந்தையில் உள்ள இந்திய மற்றும் பாகிஸ்தான் பெரிய வெங்காயம் விற்பனை செய்யப்படுவதாக விவசாயிகள் சுட்டிக் காட்டியுள்ளனர். (நி-5)

# கோதுமை மா விலை அதிகரிப்பு?

(கொழும்பு)

நாட்டில் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக பொருட்களின் விலைகள் அதிகரித்த வண்ணமுள்ளன.

தற்போதைய கொரோனா கால கட்டத்தில் மக்கள் வாழ்வாதாரத்துக்கு மிகவும் கஷ்டப்படும் நிலையில் இந்த விலை அதிகரிப்பு மக்களை சொல்லொணாத் துன்பத்துக்குள் ஆழ்த்தியுள்ளது.

ஏற்கனவே சீனி, பருப்பு, சீமெந்து ஆகியவற்றின் விலைகள் அதிகரித்துள்ள நிலையில் நாட்டில் பால்மாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் கோதுமை மா கிலோ ஒன்றின் விலையை பிறிமா நிறுவனம் அதிகரித்துள்ளது. அந்த வகையில் கிலோ ஒன்றின் விலை 12 ரூபாவினால் உயர்த்தப்பட்டுள்ளது. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு தெரியப்படுத்தாமல் இந்த விலை உயர்வை அந்நிறுவனம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## தசாக கிரியை அழைப்பிதழும் நன்றி நவிலலும்

### அமரர்.ஜோதீஸ்மதியம்மா தியாகராஜக்குருக்கள்



27.08.2021 வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது அன்னையின் இறுதிக்கிரியைகளில் அனுதாபங்கள் தெரிவித்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கிரியை விபரம்

04.09.2021 சனிக்கிழமை- தசாகம்
05.09.2021 ஞாயிற்றுக்கிழமை-ஏகாதிஷ்டம் மாசியம்
06.09.2021 திங்கட்கிழமை- சபிண்டீகரணம்
07.09.2021 செவ்வாய்க்கிழமை-கிருகபஞ்யம்

நாட்டில் நிலவும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கிரியைகள் யாவும் நடைபெறும்.

வல்லியானந்தம் வீதி,
துன்னாலை வடக்கு, கரவெட்டி.
077 767 4742

(C-2609)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## ஈரவிழிகளுடன் 9 ஆம் ஆண்டில்



யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் விசுவமடுவை வதிவிடமாகவும் கொண்ட

### அமரர்.சின்னத்தம்பி செல்லத்துரை (சாத்திரியார்)

வையத்துள்: 12.07.1945
தெய்வத்துள்: 13.09.2012
[illegible]
தேய்பிறை (04.09.2021)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இல.45/2, சாத்திரியார் கோட்டம்,
விசுவமடு.

பாசமுடன்
குடும்பத்தினர்

# வவுனியா சாந்தசோலையில் 15 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

(நெளுக்குளம்)

வவுனியா சாந்தசோலையில் நேற்று அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள மறுப்பு தெரிவித்த இரு குடும்பங்கள் உட்பட 15 குடும்பங்களை சேர்ந்த 60 உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வவுனியா சாந்தசோலை கிராமத்தில் வீடுகளில் வசிப்பவர்களுக்கு பரவலாக காய்ச்சல் பிடித்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளதை அடுத்து சுகாதாரத் துறையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட இந்நடவடிக்கையில் நேற்று சாந்தசோலை கிராம பொதுநோக்கு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் போது 15 குடும்பங்களை சேர்ந்த 60 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த பரிசோதனைக்கு ஒத்துழைக்க மறுத்த இரு குடும்பங்கள் பொலிஸாரின் அறிவுறுத்தலையடுத்து அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இரு குடும்பங்களுக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இப்பரிசோதனையில் கலந்து கொள்ளாதவர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலகத்தில் பரிசோதனைகள் மேற்கொள்ளுமாறு மாதர் அபிவிருத்திச் சங்கத்தினால் பொது மக்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.(7-4-6-299)

# வியாபார நிலையத்தில் திருட்டு



(மன்னார்)

மன்னார் நகர் பகுதியில் மீன் சந்தைக்கு அருகில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் நள்ளிரவு கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு மழை காரணமாக மின்சாரம் சிறிது நேரம் துண்டிக்கப்பட்ட நிலையில் கடையில் கதவுகள் உடைக்கப்பட்டு வியாபார நிலையத்தில் வைக்கப்பட்ட ஒரு தொகை பணமும் திருடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7-4-6-285)

# புகைப்படம் எடுத்தல் போட்டியில் இலங்கைச் சிறுவன் வெற்றி

(கொழும்பு)

ஐக்கிய இராச்சியத்தில் சர்வதேச வனவிலங்கு புகைப்படம் எடுத்தல் போட்டியில் இலங்கையை சேர்ந்த 11 வயது சிறுவன் மற்றும் புகைப்படக் கலைஞர் சிறப்புப் பாராட்டு மற்றும் வெற்றியைப் பெற்றுள்ளனர்.

11 வயது ககனா மெண்டிஸ் விக்கிரமசிங்க மற்றும் புத்தினி டி சோய்சா ஆகியோர் 2021 ஆம் ஆண்டின் வனவிலங்கு புகைப்படம் எடுத்தல் போட்டி சிறப்பு நடுவர் மன்றத்தின் பாராட்டினை பெற்றுக் கொண்டனர்.

போட்டிக்கு 57 ஆயிரம் வனவிலங்கு புகைப்படங்கள் சமர்ப்பிக்கப்பட்டன, மேலும் நடுவர் மன்றம் ஆயிரம் புகைப்படங்களைத் தேர்ந்தெடுத்தது.

மெண்டிஸ் விக்கிரமசிங்கவின் 'lockdown chicks ' என்ற பெயர் சூட்டப்பட்ட கிளிகளின் புகைப்படம் மற்றும் புத்தினிடி சோய்சாவின்



'A great swim' என்று பெயரிடப்பட்ட புகைப்படம் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து சிறப்பு புகைப்படங்களில் அடங்கும்.

இதற்கு முன்னதாக, சுற்றுச்சூழல் ஆர்வலர் ருக்ஷன் ஜெயவர்த்தன 2002 இல் இத்தகைய வெற்றியைப் பெற்றிருந்தார்.

19 ஆண்டுகளுக்குப் பிறகு தான் இலங்கை ஒரு குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# நாளை மறுதினம் பாராளுமன்றம் கூடும்

(கொழும்பு)

பாராளுமன்றம் எதிர்வரும் 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் மாத்திரம் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சீனா வழங்கிய தடுப்பூசிகளை நிராகரித்த வடகொரியா

(பியாங்யாங்)

**சீனா தங்களுக்கு வழங்கிய சுமார் 30 இலட்சம் எண்ணிக்கையிலான கொரோனாத் தடுப்பூசிகளை வேறு நாட்டுக்கு திருப்பி அனுப்பிவிடுமாறு வட கொரியா கேட்டுக்கொண்டிருப்பதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

உலகளாவிய தடுப்பூசி பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு, கடுமையாக பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு தடுப்பூசிகளை அனுப்பிவிடுமாறு வட கொரியா கேட்டுக் கொண்டதாக ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒகஸ்ட் 19ஆம் திகதி வரை வட கொரியாவில் யாருக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டதாக பதிவு செய்யப்படவில்லை என உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது. சுகாதாரப் பணியாளர்கள், காய்ச்சல் உட்பட பல்வேறு அறிகுறிகள் தென்பட்டவர்கள் என 32,291 பேர் பரிசோதிக்கப்பட்டதாகவும், அவர்களில் யாருக்கும் கொரோனா இல்லை என்பது உறுதி செய்யப்பட்டதாகவும் உலக சுகாதார நிறுவனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

உலகில் கொரோனாத் தொற்று தொடங்கிய காலத்தில் இருந்தே வடகொரியா கடுமையான கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்து வருகிறது. கடந்த ஆண்டு ஜனவரி மாதத்திலேயே அது தனது எல்லைகளை முற்றிலுமாக மூடிவிட்டது.

வடகொரியா தடுப்பூசிகளை நிராகரிப்பது இது முதல் முறையல்ல. கடந்த ஜூலை மாதத்தில் சுமார் 20 லட்சம் டோஸ் அஸ்ட்ராஜெனேகா தடுப்பூசியை வடகொரியா நிராகரித்தது. (7-4)

# அமெரிக்காவை புரட்டிப்போட்ட இடா புயல்

## பலி 46 ஆக உயர்வு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் பல மாகாணங்களை புரட்டிப்போட்டு வரும் இடா சூறாவளி, தற்போது நியூயோர்க் நகரில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. வட கிழக்கு அமெரிக்காவில் கனமழைக்கு 2 வயது சிறுவன் உட்பட 46 பேர் இது வரை பலியாகியுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு தெற்கு மாகாணமான லூசியானாவில் இடா சூறாவளி காரணமாக பெய்த கன மழையால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பல நகரங்களின் வீதிகளில் வெள்ளம் ஓடுகிறது.

நியுயார்க் நகரின் ப்ருக்ளின் மற்றும் குயின்ஸ் பகுதியிலும் வெள்ளம் சூழ்ந்துள்ளது. பல இடங்களில் சுரங்கப் பகுதிகளிலும் வெளியிடங்களிலும் மக்கள் சிக்கியிருக்கிறார்கள். அவர்களை மீட்கும் பணிகளில் உள்ளூர் நிர்வாகங்கள் தீவிர கவனம் செலுத்திவருகின்றன.

தற்போது நியுயோர்க் நகரில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூ ஜெர்சியிலும் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. கன மழை, வெள்ளம் காரணமாக நியுயோர்க் நகர சுரங்க ரெயில் சேவைகள் அனைத்தும் காலவரையின்றி நிறுத்தப்பட்டுள்ளன. நியுயோர்க் நகரில் விமான சேவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. (7-4)



தலிபான்கள் கந்தகாரில் தங்களின் வலிமையை காட்ட ஆயுத அணிவகுப்பு ஒன்றை நடத்தினர்.அதில் தற்கொலை உடைகள் மற்றும் கார் குண்டுகள் ,அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் என்பன காணப்பட்டன.இந்த 40 நிமிட அணிவகுப்பு தலிபான் தலைவர்களுக்கு முன்னால் நடைபெற்றது.

# ஆப்கானில் முதலீடு செய்ய சீனா தயார் நிலையில் உள்ளது

## தலிபான்கள் அறிவிப்பு

(காபூல்)

தலிபான்கள் தங்கள் அரசின் உச்சபட்ச தலைவராக மூத்த மத தலைவரான முல்லா ஹைபத்துல்லா அகுந்த்ஸடாவை (வயது 60) தேர்ந்தெடுத்து உள்ளனர்.

இது தொடர்பாக தலிபான் செய்தி தொடர்பாளரான சபியுல்லா முஜாகித் இத்தாலி பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள நேர்காணலில் கூறியிருப்பதாவது,

தேசிய ஒற்றுமைக்கான ஒரு புதிய அரசை நாங்கள் வெகு விரைவில் அமைப்போம். மிகச்சிறிய அளவில் அரசை அமைக்க விரும்புகிறோம்.

அதாவது முந்தைய அரசில் இடம் பெற்றிருந்த மந்திரிகளின் எண்ணிக்கையில் பாதியளவுக்கே மந்திரிகளை வைத்திருப்போம்.

குரான் மற்றும் ஷரியா சட்டப்படி பெண்கள் மந்திரிகளாக இருக்க முடியாது. அதன்படி ஆப்கானிஸ்தானின் புதிய அரசிலும் பெண்கள் இடம் பெறமாட்டார்கள்.

ஆனால் அமைச்சகங்கள், பொலிஸ் மற்றும் நீதிமன்றங்களில் உதவியாளர்களாக அவர்கள் பணியாற்ற முடியும்.

ஆப்கானிஸ்தான் பெண்கள் பல்கலைக்கழகங்களில் சேர்வதற்கு தடை விதிக்க முடியாது.சர்வதேச உறவுகளை பொறுத்தவரை, சீனாவை எங்கள் முக்கியமான கூட்டாளியாக பார்க்கிறோம். ஆப்கானிஸ்தானில் முதலீடு செய்யவும், நாட்டை மறுகட்டமைக்கவும் சீனா தயாராக இருக்கிறது.

மாஸ்கோவுடனான உறவுகள் பெரும்பாலும் அரசியல் மற்றும் பொருளாதாரம் சார்ந்தது. மேலும் சர்வதேச அமைதிக்கான சூழல்களை உருவாக்க ரஷ்யா பங்களிக்கிறது.

இவ்வாறு சபியுல்லா முஜாகித் தெரிவித்தார். இதே வேளை, அமெரிக்கா ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியுள்ள நிலையில், தலிபான்கள் சீனாவிடம் தங்கள் நட்புறவை வளர்த்துக் கொள்வதானது அமெரிக்காவிற்கு கொடுக்கப்பட்ட பதிலடியாகவே அமைந்திருப்பதாக சர்வதேச ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (7-4)

# இராணுவ வீரரை மீட்ட பிரித்தானிய இளவரசர்

(லண்டன்)

இளவரசர் வில்லியமுக்கு அறிமுகமான ஆப்கான் வீரரின் குடும்பம் காபூலில் சிக்கியிருப்பதாக தெரிய வந்ததையடுத்து, உடனடியாகஅவரைமீகவில்லியம் நடவடிக்கைஎடுத்துள்ளார்.

ராஜ குடும்பத்தினருக்கு உதவும் இராணுவ வீரர்களில் ஒருவரான Rob Dixon என்பவர் மூலம் அந்த ஆப்கான் வீரரைத் தொடர்பு கொண்ட வில்லியம், அவர் மூலம் அந்த ஆப்கான் வீரரை யும் அவரது குடும்பத்தினரையும் காபூல் விமான நிலையத்திலிருந்து மீட்டு பிரித்தானியாவுக்கு கொண்டு வந்துள்ளார். (7-4)

# கொரோனா தலைநகரமாக மாறியுள்ளது இஸ்ரேல்

(இஸ்ரேல்)

கொரோனா நான்காவது அலை காரணமாக பாதிப்பு எண்ணிக்கை நாளும் அதிகரித்து வருவதால் உலகின் கொரோனா தலைநகராக மாறியுள்ளது இஸ்ரேல்.

இஸ்ரேலில் பெரும்பாலான மக்கள் கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்ட போதிலும் நாளும் பாதிப்பு எண்ணிக்கை உச்சம்பெற்று காணப்படுகிறது.

இஸ்ரேலில் 69% மக்கள் தடுப்பூசி போட்டுக்கொண்ட நிலையில், அங்கு கொரோனா பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது.

இருப்பினும் இரண்டாவது அலையுடன் ஒப்பிடுகையில் மரண எண்ணிக்கை பெருமளவு குறைந்தே காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மூன்றாவது டோஸ் தடுப்பூசி அளிக்கும் பணிகளும் இஸ்ரேலில் முன்னெடுக்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (7-4)

# அமீரக- எகிப்து நாடுகளின் ஜாயித்-3 இராணுவ பயிற்சி ஆரம்பம்

(அபுதாபி)

**அபுதாபியில் அமீரக-எகிப்து இராணுவங்களுக்கு இடையேயான ஜாயித்-3 கூட்டு இராணுவ பயிற்சியானது தொடங்கியது.**

**இது குறித்து அமீரக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,**

**அமீரகம்-எகிப்து நாடுகளுக்கு இடையே ஒருங்கிணைந்த இராணுவ ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்காக ஜாயித்-3 என்ற தலைப்பில் கூட்டு இராணுவ பயிற்சி தொடங்கியுள்ளது.**

**இந்த பயிற்சிகள் மூலம் கூட்டு இராணுவ நடவடிக்கைகளை மேம்படுத்தவும், இருதரப்பு நிபுணத்துவத்தை பரிமாறிக்கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. மேலும் நவீன தொழில்நுட்ப கருவிகளை பயன்படுத்துதல், போரில் புதிய உத்திகளை செயற்படுத்துவது போன்றவை பரிமாறிக்கொள்ளப்படும்.**

**கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளின் திறனை இராணுவத்தினருக்கு அதிகப்படுத்தும் வகையிலான பயிற்சிகள் வழங்கப்படுகிறது. வான்வழி, கடல்வழி மற்றும் தரைவழி ஆகிய 3 பகுதிகளிலும் இந்த பயிற்சி நடத்தப்படும்.**

**ஜாயித்-3 என்ற கூட்டு இராணுவ பயிற்சியானது மொத்தம் 10 நாட்கள் அபுதாபி கடல், வான் மற்றும் தரை வழிகளில் நடைபெறும். இருதரப்பு இராணுவ உயர் அதிகாரிகள் முன்னிலையில் இந்த பயிற்சிகள் நடைபெறுகிறது என அதில் கூறப்பட்டுள்ளது. (7-4)**

# நெற் களஞ்சியசாலைக்கு சீல்



(நெளுக்குளம்)

வவுனியா கோவில்குளத்தில் அமைந்துள்ள நெற்களஞ்சியசாலைக்கு பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் சீல் வைக்கப்பட்டது.

நெற்களஞ்சிய சாலைகளில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள நெல்மூடைகள் தொடர்பான விபரங்களை வழங்குமாறு அரசாங்கம் அறிவித்திருந்தது. குறித்த கால எல்லைக்குள் அதனை வழங்காத நெற்களஞ்சிய சாலை ஒன்று வவுனியா பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை உத்தியோகத்தர்களால் நேற்று சீல் வைக்கப்பட்டது.

இதேவேளை ஹொறவப்பொத்தான வீதியில் அமைந்துள்ள பிரபல விற்பனை நிலையம் ஒன்றில் இருந்த மாமூடைகளில் நியாயவிலை காட்சிப்படுத்தப்படாமையினால் அந்த வியாபார நிலையம் மீது வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதுடன், குறித்த கோதுமைமா மூடைகளும் அலுவலர்களால் பறிமுதல் செய்யப்பட்டது. (7-4-6-299)

# வீதிகளில் வலைகளை உலர வைப்பவர்கள் மீது விரைவில் சட்ட நடவடிக்கை

(மன்னார்)



மன்னார் நகர் பகுதிகளில் உள்ள வீதிகளில் மீனவர்கள் சிலர் வலைகளை உலர விடுவதனால் விபத்துக்கள் மற்றும் சூழல் பாதிப்புகள் ஏற்படுவதை தொடர்ந்து விரைவில் வீதிகளில் வலைகளை உலர விடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதுடன் உலர விடப்பட்ட வலைகளையும் கையகப்படுத்தும் நடவடிக்கையும் மன்னார் பொலிஸாரால் மேற்கொள்ளப்படவுள்ளது

மன்னார் நகர பகுதிகளை சூழவுள்ள சில கிராமங்களில் மீன்பிடி நடவடிக்கைகளின் பின்னர் அழுக்கு நிறைந்த வலைகளை மக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் உலர வைப்பதினால் அதிகளவு விபத்துக்கள் ஏற்படுவதாகவும் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்களால் மன்னார் நகர சபை மற்றும் மன்னார் பொலிஸாருக்கும் வழங்கப்பட்ட முறைப்பாட்டை தொடர்ந்து மேற்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.கடந்த காலங்களில் மன்னார் பொலிஸ் நிலைய சுற்று சூழல் பாதுகாப்பு பிரிவினரால் பல முறை ஒலி பெருக்கிகள் மூலம் குறித்த விடயம் தொடர்பாக அறிவிக்கப்பட்ட நிலையிலும் சில மீனவர்கள் அசட்டையீனமாக தொடர்சியாக வலைகளை வீதிகளில் உலர விடும் செயற்பாடுகளில் ஈடுபடுவதால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உங்கள் கிராமங்களில் வீதிகளில் வலைகள் உலர விடப்பட்டால் உடனடியாக மன்னார் பொலிஸ் நிலைய சுற்று சூழல் பிரிவுக்கு அறிவிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (7-4-6-285)

# உத்தரவாதமின்றி ஒக்ஸிமீட்டர் விற்ற மருந்தகங்களுக்கு எதிராக வழக்கு

(குருமன்காடு)

வவுனியாவில் பொருளுக்கான உத்தரவாதமின்றி ஒக்ஸிமீட்டர் விற்பனை செய்த மூன்று மருந்தகங்களுக்கு எதிராக பாவனையாளர் அலு வல்கள் அதிகார சபையால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள தனியார் மருந்தகங்களில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினர் விசேட சோதனை நடவடிக்கையினை முன்னெடுத்தனர்.இதன்போது, வவுனியா வைத்தியசாலை வீதி, கந்தசாமி கோவில் வீதி, குருமன்காடு சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள தனியார் மருந்தகங்களில் ஒக்ஸிமீட்டர் உத்தரவாதம் இன்றி விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனையடுத்து குறித்த மூன்று வர்த்தக நிலையங்களுக்கு எதிராகவும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியாவில் ஒக்ஸிமீட்டர் 5000 ரூபாவிற்குக்கு விற்பனை செய்யப்பட்டு வரும் நிலையில், ஒக்ஸிமீட்டர் ஒன்றுக்கான அதிகூடிய சில்லறைவிலை 3000 ரூபாய் ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-4-6-250)

# வவு. போக்குவரத்து பொலிஸாரினால் விசேட சோதனை முன்னெடுப்பு



(குருமன்காடு)

கொவிட் தொற்று காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு சட்டதை மீறி அத்தியாவசிய தேவையின்றி வவுனியா நகருக்குள் நுழையும் வாகனங்களுக்கு எதிராக போக்குவரத்து பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறிசெயற்படும் வாகனங்களை கண்டறியும் முகமாக போக்குவரத்து பொலிஸார் குருமன்காடு மற்றும் மன்னார் வீதியில் நேற்றுக் காலைவிசேட சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன்போது, மன்னார் வீதி வழியாக வவுனியா நகருக்குள் நுழைந்த அனைத்து வாகனங்களும் வழி மறிக்கப்பட்டு, அவர்களது போக்குவரத்து பாஸ் சோதனை செய்யப்பட்டதுடன், அத்தியாவசிய தேவையின்றி நகருக்குள் பிரவேசித்த வாகனங்கள் பலவும் கடுமையான எச்சரிக்கையுடன் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டது. அத்துடன், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிசெயற்பட்ட 10 வாகன சாரதிகளுக்கு எதிராக போக்குவரத்து பொலிஸாரால் சட்ட நடவடிக்கைக்காக வழக்கு பதிவும் செய்யப்பட்டது. (7-4-6-250)

# தற்காலிக வர்த்தக கொட்டகைகளினால் கட்டுமானப் பணிகள் தாமதம்

## அகற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுப்பு



(அக்கராயன்)

கிளிநொச்சி நகரின் பிரதான பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளின் முன்னேற்ற நிலை குறித்து, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் நேரில் பார்வையிட்டார்.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட்ட இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வந்த நிலையில், தற்போதைய அரசாங்கத்தில் நகர அபிவிருத்தி அதிகாரசபை இந்தக் கட்டுமானப் பணிகளை பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

கட்டடவாக்க பணிகளின் பெரும்பகுதி நிறைவடைந்த நிலையில், அந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக வர்த்தக கொட்டகைகளால் பணிகள் தாமதமடைவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்தனர்.

இதனையடுத்து, மேலதிக இணைப்பாளர் றுஷாங்கன் அப் பகுதிக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார். பேருந்து கட்டடப் பகுதியில் சட்டரீதியற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ள சுமார் 15 வரையிலான கடைகளை அப்புறப்படுத்துமாறு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையிலும் அவை இன்னமும் அகற்றப்படாமை தெரியவந்தது.

இதுகுறித்து கலந்துரையாடி இணக்கமான முறையில் பேருந்து நிலையத்துக்குள் அமைக்கப்பட்டுள்ள கடைகளை நீக்குவதற்கான ஏற்பாட்டைச் செய்தார்.

கட்டடவாக்கப் பணிகளுக்குத் தடையாகவிருக்கும் தற்காலிகக் கடைக் கொட்டகைகள் நீக்கப்பட்டுவிட்டால், நிர்மானப் பணிகள்விரைவில் நிறைவுறுத்தப்பட்டு எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் பேருந்து நிலையம் உத்தியோகபூர்வமாகச் செயற்படக்கூடியதாக இருக்கும் என்று நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நகரத் திட்டமிடல் அலுவலர் தெரிவித்தார்.

இதே வேளை, பேருந்து நிலையம் அமைந்துள்ள கிளிநொச்சி கனகபுரம் சந்தி அரசாங்கத்தின் 100 நகர அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவிருப்பதால், அந்தப் பணிகளும் டிசம்பரில் நிறைவுறுத்தப்பட்டுவிடும் என்றும் அவர் மேலும் இதன்போது தெரிவித்தார். (7-4-6-350)



வவுனியா பொதுவைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு தேவைப்படும் உயிர் காற்று இயந்திரம் லண்டன் பாக்கியம் அறக்கட்டளை அமைப்பினூடாக வவுனியா பொது வைத்தியசாலை பணிப்பாளரிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. (படம்-சதீஸ்)

# மக்களை கட்டுப்படுத்தவே அவசரகாலச் சட்டம்

## சஜித் குற்றச்சாட்டு

**(கொழும்பு)**

**ஜனநாயகத்தை வீழ்த்தி சர்வாதிகாரமிக்க பயணத்தை நோக்கி நகரும் அவசரகால சட்ட வர்த்தமானியை ஜனாதிபதி உடனடியாக மீளப்பெற வேண்டும்.**



நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்க வேண்டுமாயின் நுகர்வோர் பாதுகாப்பு உரிமை சட்டத்திற்கு அமைய செயற்படலாம்.

அதனை விடுத்து ஜனாதிபதி அவசரகால சட்டத்தை அவரமாக அமுல்படுத்தியுள்ளதன் நோக்கம் என்ன என்பதை சுட்டிக்காட்டி எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று முன்தினம் அறிக்கை வெளியிட்டுள்ளார்

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்துவதாக குறிப்பிட்டுக்கொண்டு அரசாங்கம் அவசர கால சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது.

இது அரசாங்கத்தின் தவறான செயற்பாடுகள் மற்றும் திறமையின்மையை மூடி மறைக்கும் தன்னிச்சையான ஒரு செயற்பாடாக கருத வேண்டும்.

2003 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரச் சட்டத்தின் மூலம் அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க முடியும்.

ஆனால் அரசாங்கம் அதனை விடுத்து அவசரகால சட்டத்தை அவசரமான நிலையில் பிரகடனப்படுத்தியுள்ளமை ஒரு ஆபத்தான நிலையை எடுத்துக்காட்டியுள்ளது.

ஜனநாயக கொள்கை மிக்க நாட்டை சர்வாதிகாரமிக்க நாடாக மாற்றியமைத்து மனித உரிமைகளுக்கு சவால் விடுவது அரசாங்கத்தின் பிரதான நோக்கமாக உள்ளது என்பதை இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக விளங்கிக் கொள்ளலாம்.

பொருட்களின் விலையேற்றத்தையும் வெளிநாட்டு கையிருப்பின் அளவையும் கட்டுப்படுத்தாத அரசாங்கம் நாட்டு மக்களை கட்டுப்படுத்த அவசரகால சட்டத்தை பயன்படுத்துகிறது.

அவசரகால சட்டத்தை கொண்டு முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளையும் முற்றாக எதிர்ப்போம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# சுகாதார விதி மீறல் மேலும் 577 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப் படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக்காலை 6.00 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரப் பகுதியில் மொத்தம் 577 நபர்கள் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 63,908 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

# ஜனாதிபதியை சந்திக்க ஐ.ம.ச தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

கொரோனா நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பது பற்றியும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பது சம்பந்தமாகவும் ஆராய்வதற்கு சர்வ கட்சிக் கூட்டத்தை கூட்டி, சர்வ கட்சிப் பொறிமுறை ஊடாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும் ஜனாதிபதி தரப்பில் இருந்து அதற்கு உரிய பதில் வழங்கப்படவில்லை.

இந் நிலையிலேயே சந்திப்புக்கான நேரம் கோரி கடிதம் அனுப்பப்படவுள்ளது.

கொரோனாவின் இரண்டாவது அலையின்போது எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2396

**தக்சி**

காத்திருப்பது கூட சுகம்தான் காதலிக்காக அல்ல...




கறிக்குழம்புக்காக...

**கவி**

சிலையும்... சிற்பியும்...



**ஆதி**

கல்யாணமானவன் கல்யாணமாகுறவனை பார்த்து happy married life என்று வாழ்த்துறான் பார்த்திங்களா?



எப்படித்தான் இப்படி பொய் சொல்றாங்களோ தெரியல...

**சித்ரா**

வெயில் காலத்தில் மோர் பந்தல் வைக்கிற மாதிரி...



குளிர் காலத்தில் டீ பந்தல் வச்சா குறைஞ்சா போயிருவீங்க...

**தனு**




**கஜன்**

ஏன் அண்ணே இப்படி வாறீங்க...?
அது ஒன்றுமில்லடா இன்று என் பொண்டாட்டிக்கு பிறந்தநாள்...கிஃப்ட் எங்க என்று கேட்டா...
நானே உனக்கு பெரிய கிஃப்ட் என்று சொன்னேன்... அதுதான்...



அதுக்கு ஏன் சட்டை கிழிஞ்சு இருக்கு?
கிஃப்டை பிரிச்சு பார்த்திட்டா...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# என்னை படுகொலை செய்ய மகிந்த, மைத்திரி சூழ்ச்சி

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு



(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கு தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும், முன்னாள் ஜனாதிபதியும் மைத்திரிபால சிறிசேனவும் கங்கணம் கட்டிச் செயற்பட்டு வருவதாக சுதந்திரக் கட்சியின் போஷகரும், முன்னாள் ஜனாதிபதியு மான சந்திரிகா குமாரதுங்க குற்றஞ் சாட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு முகநூலில் நேற்று முன்தினம் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ள அவர், சுதந்திரக் கட்சியை அழிக்கின்ற மஹிந்த - மைத்திரியின் நிகழ்ச்சி நிரலில் தம்மை படுகொலை செய்கின்ற சூழ்ச்சியும் இருப்பதாக அதிர்ச்சி தகவலொன்றையும் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இன்று ஏற்பட்டிருக்கின்ற தலையெழுத்தைப் பார்க்கின்ற போது மிகவும் கவலையடைகின்றேன். கட்சிக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமையை நினைத்தால் தினமும் காலையில் படுக்கையிலிருந்து எழவும் தோன்றுவதில்லை.

அதற்கு நானும் காரணம். எனினும் என்னால் செய்யமுடியாமற் போன சில விடயங்களுக்காக வருத்தமடைகின்றேன்.

1994ஆம் ஆண்டில் கட்சியை ஆட்சிக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுத்த படியினால் நாட்டிற்கு செய்த சேவை காரணமாக தொடர்ந்தும் 23 வருடங்களாக ஆட்சியில் இருக்கமுடியுமான பலம் உருவாகியது.

2007ஆம் ஆண்டிலிருந்து மீண்டும் அரசியலுக்கு வரும்படி பலரும் அழைத்தார்கள். இருப்பினும் நாட்டிற்கும், கட்சிக்கும் ஏற்பட்டுள்ள நிலைமையை உணர்ந்தது மீளவும் வந்தேன்.

2015ஆம் ஆண்டில் தனித்து நான் முடிவெடுத்தேன். ஐக்கிய தேசியக் கட்சிக்கு செல்லாமல் நாட்டிற்கு ஏற்படுகின்ற அழிவை தடுப்பதற்கு சோபித தேரர் உள்ளிட்ட சிவில் அமைப்புக்கள், தமிழ், முஸ்லிம், சிங்கள கட்சிகள் அழைத்த போது, கூட்டணியை அமைப்பதற்கான யோசனையை நானே முன்வைத்தேன்.

எனக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இரண்டு தலைவர்களுமே கட்சியை அழித்தார்கள். அவர்களில் ஒருவர் உலகத்திலுள்ள சூதாட்டக்காரர்களை உள்நாட்டிற்கு அழைத்து வந்தார். போதைப்பொருள் கடத்தலை செய்வோரை பாராளுமன்றத்திற்கு அழைத்தார். அதனை எதிர்த்ததால் என்னையும் படுகொலைசெய்யும் அளவுக்கு ஆலோசனை நடத்தினார்கள். என்மீது சேறு பூசினார்கள்.

கட்சியை பாதுகாப்பதாக வந்த மைத்திரி மீண்டும் ராஜபக்ஷவுடன் இணைந்து கட்சியை அழிக்கத்தொடங்கினார். எனினும் எமது சுதந் திரக் கட்சியை அழிக்க எவராலும் முடியாது என அவர் தெரிவித்தார். (நி-5)

# தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## ரிஜ்வே வைத்தியசாலைப் பணிப்பாளர்

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகும் சிறுவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கொழும்பு ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் ஜீ விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த நிலைமையை தவறாக புரிந்து கொண்டு மக்கள் சுகாதார கட்டுப்பாடுகளை மீறிசெயற்படக் கூடாது என மருத்துவமனையில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

கொரோனா தொற்றுக்குள்ளாகி கொழும்பு சீமாட்டி ரிஜ்வே வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையில் சிறிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. சிறுவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து வருவதில் தாமதமோ, தயக்கமோ வேண்டாமென நாம் பொது மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு தாமதிப்பது உயிர் ஆபத்துக்களை ஏற்படுத்தக்கூடும். என மருத்துவர் தெரிவித்தார். (நி-5)



சர்வதேச தெங்கு தினத்தை முன்னிட்டு 10 விசேட நினைவு முத்திரைகள் வெளியிடும் நிகழ்வு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## காதையும் மாற்றலாம்!

சிறிது நாளைக்கு முன்னர் பேப்பரிலே ஒரு செய்தி வந்தது! நீங்கள் கூட படித்திருப்பீர்கள். ஒருத்தர் கோபத்தில் இன்னொருத்தர் காதை பிடித்து கடித்து துப்பிட்டார்! காதைப் பிடித்து திருகுவது சகஜம். சின்ன வயதிலே கணக்கு தப்பாக போட்டால் உடனே எங்கள் வாத்தியார் பிரம்பு எங்கேயிருக்கு என்று தேட மாட்டார். காது எங்கே இருக்கு என்று தான் தேடுவார் பிடித்து திருகுவதற்கு! அதனாலே காதை திருகுவது என்பது சகஜம்.

ஆனால் காதை கடித்துத் துண்டா எடுக்கிறது சாதாரண விடயமல்ல! ஏதாவது இரகசியம் பேசினால் என்னடா அவன் காதை கடிக்கிறான் என்று வேடிக்கையாக சொல்வது வழக்கம்! காதிலே போட்டிருக்கிற நகை தான் இது வரைக்கும் பறி போயிக் கொண்டிருந்தது.

இனிமேல் காதே பறிபோயிடும் போல இருக்கிறது! காது போனால் கூட கவலையில்லை. காது கேட்காமல் போனாத் தான் கஷ்டம். காது கேட்காதவங்களுக்கு உபயோகப்படுக்கின்ற மாதிரி புதிய கண்டுபிடிப்பு! எங்கே தெரியுமா? ஜப்பானிலே! நம்முடைய காதிலே செவிப்பறை என்ற ஒரு உறுப்பு இருக்கிறது! இது சரியாக இல்லை என்றால் காது கேட்காது!

ஜப்பானில் என்ன செய்தார்கள் என்றால் காது கேட்காதவர்களுக்கு இந்த 'இயர்டிரம்' மை எடுத்து விட்டு புதிய ஒரு இயர்டிரம் மை பொருத்திட்டார்கள்! அதற்குப்பிறகு பார்த்தால் காது கேட்கிற கருவி இல்லாமல் காது நல்லாக கேட்க ஆரம்பித்து விட்டது.

அது சரி! புதிய "இயர்டிரம்" பொறுத்தினார்கள் என்று சொன்னேனே அது ஏது? செயற்கையாக செய்ததா? அப்படி இல்லை! இன்னொரு காதிலிருந்து எடுக்கிறது. அப்படி என்றால் இன்னொரு காதிற்கு எங்கே போறது! யாருகிட்டேயாவது போய் "கொஞ்சம் மருத்துவமனை வரைக்கும் வந்திட்டு போங்கள் உங்கள் காதுக் குள்ளே இருக்கிற 'இயர் டிரம்' மை எடுத்திருக்கிறேன்" என்று சொல்ல முடியுமா?

அப்படி சொன்னால் என்ன நடக்கும்? அவருக்கு வருகிற எரிச்சலிலே நம்முடைய "காதை"யே தனியாக எடுத்தவர். ஜப்பானிலே என்ன செய்தார்கள் செத்துப்போன ஒருத்தர் காதிலே இருந்த Ear Drumஐ தான் எடுத்து இவருக்கு பொருத்தினார்கள். செத்துப் போனவர்களின் காதிலே இருக்கின்ற 'டிரம்' மை எடுத்து உயிரோடு இருக்கிறவர்களின் காதிலே பொருத்தலாம்! செத்துப்போன 24 மணி நேரத்திற்குள்ளே எடுத்துப் பத்திரப்படுத்தி வைக்க வேண்டும். '0' டிகிரிக்கு கீழே 70 c.c. குளிர் பதனத்திலே அதை வைக்க வேண்டும்.

அப்படி வைத்திட்டால் போதும்... அதற்குப்பிறகு 2 வருடத்தில் இருந்து 5 வருடம் வரைக்கும் அதை எடுத்து இன்னொருத்தருக்கு உபயோகப்படுத்தலாம். அதனாலே இனிமேல் "கண்தானம்" மாதிரி காது தானமும் செய்யலாம் போல இருக்கும்!

உயிர் இருக்கிற வரைக்கும் இந்த உடம்பு பிறகுக்கு உபயோகப்படுகிறதிற்கு யோசிக்கலாம்! ஆனால் உயிர் போனதிற்குப்பிறகு எப்படியெல்லாம் இந்த உடம்பு உபயோகப்படுத்துவது பார்த்திங்களா? அந்த அளவிற்கு மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது! இன்னமும் வளர்ந்துக்கொண்டு தான் வருகிறது!

ஒவ்வொரு வியாதிக்கும் ஒரு "ஸ்பெஷலிஸ்ட்" என்கின்ற அளவுக்கு டாக்டர்கள்!

அதே மாதிரி கண்ணுக்கு தனி டாக்டர்! காது, மூக்கு, தொண்டைக்கு தனி டாக்டர் வந்தாலும் வருவார். மருத்துவ அறிவு வளர்ந்துக் கொண்டே இருக்கிறது. காது சம்பந்தமாக நடக்கிற ஆராய்ச்சிகளை பார்க்கின்ற போது அதற்காக ஒரு தனி டாக்டர் வந்தாலும் வருவார். இன்னும் சிறிது நாளிலே இப்படி நடந்தால் கூட ஆச்சிரியப்படுகிறது இல்லை! எப்படி தெரியுமா?

ஒருத்தருக்கு காது வலி! அரச மருத்துவமனைக்கு போறார். டாக்டரிடம் காட்டுகிறார். அவர் "எந்த காதிலே வலி" என்று கேட்கிறார். இவர் "இடது காதிலே" என்கிறார். "அப்படி என்றால் டாக்டர் அந்தப் பக்கம் இருக்கிறார் போங்கள்" என்கிறார்.

"அப்படி என்றால் நீங்கள்...?" என்று கேட்கிறார் இவர். இதற்கு அவர் "நான் வலது காதுக்கான டாக்டர்" என்கிறார்!




# லட்சுமி கடாட்சம்

முன்னொரு காலத்தில் மாமுனிவர்ஒருவர் காட்டில் தவம்செய்து வந்தார்.

சிறு வயதிலிருந்தே தவக்கோலம் பூண்டு இறைவனை தொழுது வந்ததால், அந்த காட்டில் வசித்த கொடிய மிருகங்கள் கூட அவரிடம் குழந்தைகளை போல நடந்து கொண்டன.

ஒரு நாள் அவர் முன் அழகிய பெண் ஒருத்தி தோன்றினாள். அவளது பேரழகு பிரமிக்க வைத்தது.

இருப்பினும் மனம் சலனப்படாமல் அந்த அழகியை பார்த்து, "அம்மா நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றார்.

"நான் தான் மகாலட்சுமி என்னுடைய விதிப் பயனால் சில நாட்கள் உங்களுடன் வசிக்க வந்துள்ளேன்.

நீங்கள் என்னை உதறித் தள்ளினாலும் உங்களைவிட்டுநான்போக மாட்டேன். பிரம்மன் கட்டளைப்படி நான் உங்களுடன் இருந்தாக வேண்டும்,"என்றாள்.

மகாலட்சுமி போக மாட்டாள் என்பதை அறிந்த முனிவர் அந்த ஒப்பந்தத்திற்கு சம்மதித்தார்."அம்மாநீங்கள் வரும் பொழுது என்னிடம் சொல்லிக்கொண்டு வந்தது போல போகும் போது சொல்லிக்கொண்டே போக வேண்டும்," என்றார்.



லட்சுமியும் சம்மதித்தாள். அன்றிலிருந்து தன் மீது லட்சுமியின் அருள் பூரணமாக இருப்பதை அறிந்தார்.

அதை சோதித்துப் பார்க்க விரும்பினார் முனிவர். எனவே, காட்டை விட்டு பொற்குன்றம் என்ற மாநகரை அடைந்தார்.

அந்த அரண் மனையின் அரசரும் மந்திரிகளும் அமர்ந்திருந்தனர்.

(தொடரும்)

# மகாபாரதம்

சந்தர்ப்பவசத்தால் காரணமின்றி ஒருவரைச் சினம் கொண்டு தண்டித்திருந்தால்அவன் மகிழ்ச்சியடையும்படி நல்ல சொற்களைக் கூறிப் பொருளையும் கொடுத்து அவனது வெறுப்புணர்ச்சியை மாற்ற வேண்டும்.

**முப்பத்தாறு குணங்கள்**

"தருமா, அறம், பொருள், இன்பம் இம்மூன்றையும் காலத்திற்கேற்றபடி போற்ற வேண்டும். காலம் அரசனுக்குக் காரணமா? அல்லது அரசன் காலத்துக்குக் காரணமா? என்ற சந்தேகம் உனக்கு வரக்கூடாது.




அரசன் தண்ட நீதியை நன்றாகச்செலுத்தி வந்தால் அச்சமயத்தில் கிருதயுகம் நடைபெறுவதாக உணர வேண்டும். அப்போது மக்கள் மனதிலும் தருமமே நிலைத்திருக்கும். அதர்மம் தலை காட்டாது. மக்கள் நோயின்றி நீடு வாழ்வர்.

மக்களின் குரலும், நிறமும்,மனமும் தெளிவாக விளங்கும். அக்காலத்தில் பெண்கள் விதவைகளாக ஆவதில்லை. கொடிய மனிதர்கள் உண்டாகமாட்டார்கள். உழவு இன்றியே பூமி பயன்தரும். இவை கிருதயுக தருமம்.

அரசன் தண்ட நீதியின் ஒரு பாகத்தைத் தள்ளிவிட்டுமற்றமூன்று பாகங்களையும் தொடர்ந்து செய்யும் போது திரேதாயுகந்நடைபெறும்

அக் காலத்தில் தருமத்தில்மூன்று பாகமும் அதருமத்தில் ஒரு பாகமும் கலந்து நிற்கும். அந்தக் காலத்தில் உழுதால்தான் பூமி பயனைத்தரும்.

அரசன் தண்ட நீதியின் பாதி பாகத்தை நீக்கிவிட்டுப்பாதிபாகத்தைத் தொடர்ந்து நின்றால் துவாபரயுகம் நடைபெறும்.

அக்காலத்தில் இரண்டு பாகம் புண்ணியமும், இரண்டு பாகம் பாவமும்கலந்து நடைபெறும். அப்போது உழுது பயிரிட்டாலும் பூமி பாதி பயனைத் தான் தரும்.

அரசன் தண்ட நீதியை முழுவதுமாகக் கைவிடின் கலியுகம் நடைபெறும். கலியுகத்தில் எங்கும் அதர்மமே தலை விரித்து ஆடும். தருமத்தை காணமுடியாது. நான்கு வருண தருமங்கள் சிதறிப் போகும். வியாதிகள் பெருகும். ஆடவர் அகால மரணமடைவர். மகளிர் விதவை ஆவர். ஆகவே தருமா, நான்கு யுகங்களுக்கும்காரணன் என உணர்ந்து நாட்டை நன்கு காப்பாயாக" என்றார்பீஷ்மர்.(தொடரும்)

மனசாட்சியைக் கொல்லக்கூடாது. அது நமது நியாய அறிவின் நாடித்துடிப்பாகும்.

*– சாமுவேல் காஸ்பிட்ஜ்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அதிகாரங்களை எவரும் துஷ்பிரயோகம் செய்யாதீர்கள்

அதிகாரத் துஷ்பிரயோகங்கள் அரச அலுவலர்கள் மட்டத்தில் கடுமையாக நடப்பதாகப் பொதுமக்கள் பலரும் குற்றம் சாட்டுகின்றனர்.

அதிலும் கொரோனாத் தொற்றுக் காலத்தில் கொரோனாவைச் சாட்டி அரச அலுவலர்கள் தங்களின் கடமைகளைத் தட்டிக்கழிப்பதாகவும் பொதுமக்கள் குறைபட்டுக் கொள்கின்றனர்.

இதற்கு மேலாக, சுகாதாரப் பரிசோதகர்கள் தமக்கு இருக்கக்கூடிய அதிகாரங்களைத் துஷ்பிரயோகம் செய்வதாகவும் தாம் நினைத்தால் தனிமைப்படுத்தவும் கொரோனாத் தொற்றாளர்களைப் பராமரிக்கும் இடங்களுக்கு அனுப்பவும் முடியும் என்ற இறுமாப்பில் செயற்படுவதான குற்றச்சாட்டுக்கள் பரவலாக முன்வைக்கப்படுகின்றன.

பொதுவில் கொரோனாத் தொற்றுக் காலத்தில் பொதுசுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினரின் பணி போற்றுதற்குரியது.

கொரோனாத் தொற்றின் அபாயகரமான சூழலுக்குள் நின்று அவர்கள் ஆற்றுகின்ற பணியை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது.

அதிலும் பெரும்பாலான சுகாதாரப் பரிசோதகர்கள் தங்கள் மனச்சாட்சிக்கு அமைய உன்னதமாகப் பணியாற்றி வருகின்றனர்.

இருந்தும் ஒரு சில பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தங்களின் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்வதிலும் தனிப்பட்ட குரோதங்கள் காரணமாகப் பழிதீர்ப்பதிலும் ஈடுபடுவதாகப் பொதுமக்கள் தரப்பில் குற்றம் சுமத்தப்படுகின்றது.

இவ்வாறு ஒரு சிலர் செய்கின்ற அதிகாரத் துஷ்பிரயோகம் சுகாதாரப் பரிசோதகர்களின் ஒட்டுமொத்தப் பணிக்கும் களங்கத்தை ஏற்படுத்திவிடுவதாக அமையும்.

எனவே இது விடயத்தில், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் தங்களின் பொறுப்பையும் கடமையையும் உணர்ந்து பொதுமக்களுக்கு வழங்க வேண்டிய கௌரவத்தை வழங்கித் தமது கடமையைச் செய்ய வேண்டுமென்பது வினயமான கோரிக்கையாகும்.

இதற்கு மேலாக, அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுகின்ற அத்தனை அரச அலுவலர்களும் தத்தம் கடமையின்போது பொது மக்களுடன் கண்டபாட்டில் கதைக்காமல், அவர்கள் கௌரவத்துக்குரிய பிரஜைகள் என்பதை மனதில் இருத்தி அனைவருடனும் ஒரு சுமுகமான தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக பொதுமக்கள் எதிர்கொண்டுள்ள கஷ்டங்கள் சொல்லிமாளா.

பொருளாதார ரீதியில் மட்டுமன்றி உள ரீதியிலும் பல்வேறு நெருக்கடிகளுக்குப் பொதுமக்கள் முகம்கொடுத்துள்ளனர்.

தவிர, கொரோனாத் தொற்றால் ஏற்பட்டுள்ள மரணங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு மிகப்பெரும் மனஉளைச்சலைக் கொடுத்துள்ளது.

இறந்தவரின் உடலைத் தமது வீட்டில் வைத்து கிரியைகள் செய்யவும் இறுதிச் சடங்கை நிறைவேற்றவும் முடியவில்லையே என்ற வேதனையோடு இருக்கையில், அவர்களோடு அணுகும்போது அன்பு, இரக்கம், பரிவு என்பவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமாயின் எந்த விடயத்தையும் மிக எளிதாக கையாளமுடியும்.

ஆகவே கிராம உத்தியோகத்தர்கள், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் தொடக்கம் மயானத்தில் தகனம் செய்கின்ற பணியை ஆற்றுகின்றவர் வரையில் அனைவரும் அன்போடு இனிய சொற்களைக் கூறுகின்றவர்களாகத் தங்களை மாற்றிக் கொண்டால் அதுவே நம் அனைவரையும் ஆற்றுப்படுத்தும் அருமருந்தாகும்.

இதை அனைவரும் நினைவிற் கொண்டு செயலாற்றுவோம்.

# காரைநகரில் நூற்றுக்கு அதிகமானோருடன் கோலாகலமாக இடம்பெற்ற திருமண நிகழ்வு

## அனைவரையும் தனிமைப்படுத்திய சுகாதார தரப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் பிரதேசத்தில் திருமண நிகழ்வு ஒன்று நூறுக்கும் அதிகமானோரின்பங்குபற்றுதலுடன் கோலாகலமாக நடைபெற்றதாக தகவல்கள் ஆதாரபூர்வமாக வெளியாகியுள்ள நிலையில் அதில் பங்கேற்றவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காரைநகர் அலவின் வீதியில் கடந்த புதன்கிழமை குறித்த நிகழ்வு கோலாகலமாக நடைபெற்றிருப்பதாகவும் முகநூல்களில் படங்கள் பகிரப்பட்டதன் ஊடாகவும் சம்பவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

ஒளிப்படங்களில் காணப்பட்டவர்கள் முகக்கவசம்கூட அணிந்திருக்காத நிலையில் அவர்கள் அனைவரையும் அடையாளம் கண்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியிருப்பதாக சுகாதாரத் தரப்புகள் தெரிவித்தன. (ம-3)

## கொரோனா சிகிச்சை பிரிவில் மரணமானவர்

## அடிகாயத்தால் மரணமானதாக பிரேத அறிக்கையில் தெரிவிப்பு

(கரணவாய்)

கொரோனா சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்த மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்த தர்மலிங்கம் இரத்தினகுலசிங்கம் (வயது -63) என்பவர் அடித்தே கொலை செய்யப்பட்டிருப்பதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவில் கடந்த 30 ஆம் திகதி உயிரிழந்த மேற்படி நபரின் மரண விசாரணை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

விசாரணையின் போது இவரை கடந்த 16. 8 .2021 அன்று அப்பகுதியைச் சேர்ந்த நால்வர் இரும்புக் குழாயால் தாக்கியதாகவும் இதனால் படுகாயமடைந்த நிலையில் இருந்த அவரை நோயாளர் காவுவண்டியின் மூலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இறந்தவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று, நிமோனியா தொற்று இருந்தாலும் அடிகாயத்தினாலேயே மரணம் நிகழ்ந்துள்ளதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவரைத் தாக்கிய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,60)

## 40 இலட்சம் சினோபார்ம் இன்று நாட்டுக்கு வருகின்றது

(கொழும்பு)

சீனாவின் தயாரிப்பிலான 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் இன்று இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள சீனத் தூதரகம் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் இந்தத் தகவலைப் பதிவிட்டுள்ளது.

ஒரே நாளில் அதிகூடிய சினோபார்ம் தடுப்பூசிகள் நாட்டுக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

குறித்த 40 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகளுடன் சீனாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தடுப்பூசிகளின் எண்ணிக்கை 2 கோடி 20 இலட்சமாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வடமராட்சி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு உதவிக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பிரதேசத்தில் வறுமைக் கோட்டின்கீழ் வசிக்கும் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளைக் கொண்ட குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக சிறுதொகைப் பணம் வழங்கப்பட உள்ளது.

மேற்படி பண உதவியை கதிர்காமத்தம்பி அரியகுணராஜா என்பவர் வழங்குவதற்கு முன்வந்துள்ளார்.

புதிய அல்வாய் கிழக்கில் தெரிவு செய்யப்பட்ட ஒரு சிலருக்கு இன்று காலை 9.30 மணிக்கு முதற்கட்டமாக பண உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் சுகாதார நடைமுறையைப் பின்பற்றி குறித்த உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## மன உறுதி வேண்டும்

❖ அன்பின் மூலமாகச் செய்யப்படும் ஒவ்வொரு செயலும் மகிழ்ச்சியைக் கொண்டு வந்தே தீரும்.

❖ பெற்றோரை மகிழ்ச்சிப்படுத்தும் பிள்ளைகள் கடவுளையும் மகிழ்ச்சி அடையச் செய்கின்றனர்.

❖ மனஒருமையுடன் பணியாற்றுங்கள். ஆர்வத்துடன் ஈடுபட்டால் பணிகளைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

❖ தவறை எண்ணி வருந்த வேண்டாம். நமக்கு வழிகாட்டும் தெய்வமாக இருப்பதால் தவறைப் பெரும்பேறாகக் கருதுங்கள்.

❖ அமைதி, மன்னிக்கும் பெருந்தன்மை, மனஉறுதி ஆகிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுங்கள். வாழ்வில் வளரத் தொடங்குவீர்கள்.

❖ அடுத்தவர் கருத்தை கண்மூடித்தனமாக பின்பற்றாதீர்கள். எல்லாவற்றையும் ஆராய்ந்து பாருங்கள். அதே சமயத்தில் உங்கள் கருத்தில் உறுதியாக இருங்கள்.

❖ விதையின் சக்தி தான் மரமாக வளர்கிறது. அதுபோல, ஒவ்வொருவரின் வாழ்வும் அவரவர் கொண்டிருக்கும் மன ஆற்றலைப் பொறுத்தே அமைகிறது.

# மாகாண சபைத் தேர்தல்கள்

## 25

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் -2008

வடமத்திய மற்றும் சப்ரகமுவ ஆகிய இரண்டு மாகாண சபைகளும் அவற்றின் ஆளுநர்களினால் அரசியலமைப்பின் 154ஆ(8) உறுப்புரையின் கீழ் கலைக்கப்பட்டன. இவ் வறிவித்தல்கள் முறையே 1553/6 மற்றும் 1553/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன. இதன் விபரம் அட்டவணை 13இல் தரப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரினால் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்கள் 2008.06.13 ஆம் திகதிய 1553/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது.

வேட்புமனுக்களைக் கையேற்கும் காலக்கேடு 2008.06.27 ஆம் திகதி முதல் 2008.07.04 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரையென நிர்ணயிக்கப்பட்டது.

அட்டவணை 13

| மாகாண சபை | வாக்கெடுப்பு நடத்தப்பட்ட திகதி | மாகாணசபையின் முதலாம் கூட்டத் திகதி | பதவிக்காலம் முடிவடையவிருந்த திகதி | கலைக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|---|
| வடமத்திய | 2004.07.10 | 2004.08.11 | 2009.08.10 | 2008.06.09 |
| சப்ரகமுவ | 2004.07.10 | 2004.08.09 | 2009.08.08 | 2008.06.09 |

இரண்டு மாகாண சபைகளும் கலைக்கப்பட்டதன் செல்லுபடியான தன்மையை சவாலுக்குட்படுத்தி 2008.06.13 ஆம் திகதி இரண்டு அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அநுராதபுரம், கொடகே மாவத்தை, இல. 621/4 இல் வதிகின்ற ஏ.எம். ரம்பண்டா அபேசிங்க மற்றும் தம்மென்னாவெவ, இல. 110/2 ஐச் சேர்ந்த எச்.எம்.ஏ. ரத்நாயக்க ஆகியோர் SCFR222/2008 ஆம் இலக்க மனுவினூடாக வடமத்திய மாகாணம் தொடர்பாகவும், இரத்தினபுரி, கொழும்பு வீதி இல. 39/5 இல் வதிகின்ற ஏ.ஏ.எஸ். விஜேதுங்க மற்றும் எட்டியாந்தோட்டை பிரான்சிஸ் பெரேரா மாவத்தையில் வதிகின்ற கே.எஸ்.எஸ். பெரேரா ஆகியோர் SCFR223/2008 ஆம் இலக்க மனுவினூடாக சப்ரகமுவ மாகாணம் தொடர்பாகவும் இம் மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். இரண்டு மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன.

இரண்டு மாகாணங்களின் ஒவ்வொரு மாவட்டத்தினதும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை (I), ஒவ்வொரு மாவட்டம் சார்பாகவும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை (II), மற்றும் பெயர் குறித்து நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை (III) என்பன அட்டவணை 13Aஇல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 13A வடமத்திய, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள்-2008

| மாவட்டம் | I | II | III |
|---|---|---|---|
| அநுராதபுரம் | 569,398 | 21 | 24 |
| பொலநறுவை | 277,056 | 10 | 13 |
| இரத்தினபுரி | 713,205 | 24 | 27 |
| கேகாலை | 605,621 | 18 | 21 |

வேட்புமனுக்களைக் கையேற்றல் முடிவடைந்ததன் பின்னர், அநுராதபுர மாவட்டத்தில் 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 7 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும், பொலநறுவை மாவட்டத்தில் 10 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 8 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும், இரத்தினபுரி மாவட்டத்தில் 12 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 9 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும், கேகாலை மாவட்டத்தில் 11 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மற்றும் 10 சுயேச்சைக் குழுக்கள் என்பனவும் போட்டியில் குதித்தன. அநுராதபுர மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 288 பேர்களும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 168 பேர்களும் காணப்பட்டனர். பொலநறுவை மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 130 பேரும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 104 பேரும், இரத்தினபுரி மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 324 பேரும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 243 பேரும், கேகாலை மாவட்டத்தில் அரசியல் கட்சிகளிலிருந்து போட்டியிட முன்வந்த வேட்பாளர்கள் 231 பேர்களும் சுயேச்சைக் குழுக்களிலிருந்து 210 பேருமாக மொத்தம் 1698 பேர் காணப்பட்டனர்.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் மூன்றின் வேட்புமனுக்கள் ஒவ்வொன்று வீதம் அநுராதபுரம், பொலநறுவை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் சுயேச்சைக் குழுவொன்றின் ஒரு வேட்புமனு அநுராதபுர மாவட்டத்திலும் இரண்டு வேட்புமனுக்கள் இரத்தினபுரி மாவட்டத்திலும் மற்றொரு வேட்புமனு கேகாலை மாவட்டத்திலும் நிராகரிக்கப்பட்டன.

வேட்புமனு கையேற்பு நடவடிக்கைகளின் ஈற்றில் வாக்கெடுப்பு நடத்தப்படுகின்ற திகதி 2008.08.23 என தெரிவத்தாட்சி அலுவலர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது.

வாக்கெடுப்புக்கள், வடமத்திய மாகாணத்தின் 758 வாக்கெடுப்பு நிலையங்களிலும் மற்றும் சப்ரகமுவ மாகாணத்தின் ஆயிரத்து 14 வாக்கெடுப்பு நிலையங்களிலும் 2008.08.23 ஆம் திகதி நடைபெற்றன.

### தேர்தல்கள் கண்காணிப்பாளர்களுக்கு விசேட அனுமதி

தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியோடு இரண்டு அமைப்புக்கள் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை கண்காணித்ததோடு, அவர்களின் கண்காணிப்பாளர்களுக்கு வாக்களிப்பு நிலையத்துக்குள் தரித்திருந்து கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட அவகாசம் அளிக்கப்பட்டது. இவ்வாறு கண்காணிப்பு நடவடிக்கைகளில் நீதியானதும் அமைதியானதுமான தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு (PAFFREL) மற்றும் தேர்தல் வன்முறைகள் கண்காணிப்பு நிலையம் (CMEV) ஆகிய அமைப்புக்கள் ஈடுபட்டன. இன்னும் சில அமைப்புகள் வாக்களிப்பு நிலையத்துக்குள் உட்பிரவேசிக்காமல் வாக்கெடுப்பு நடவடிக்கைகளை கண்காணித்தன.

வாக்களிப்பு நிலையங்களில் இடம்பெற எதிர்பார்க்கப்பட்ட ஊழல்கள், வன்முறைகள் மற்றும் ஏனைய நிகழ்வுகள் தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டு அவை தொடர்பாக உடனடியாக செயற்படவும் வாக்களிப்பு நிலையங்களில் செயல்முறை தொடர்பாக அக்கறையோடு நடந்து கொள்ளவும் மாவட்டங்களில் பல இடங்களில் இணைப்பு நிலையங்கள் முதன் முறையாக இத்தேர்தலின்போது நிறுவப்பட்டன.

வாக்கெடுப்பு தினத்திற்கு முன்னர், முக்கியமாக அநுராதபுர மாவட்டத்தில் பாரதூரமான வன் முறைச் செயல்கள் நிகழ்ந்ததாக அறிவிக்கப்பட்டபோதிலும், வாக்கெடுப்புத் தினத்தில் வன்முறைகள் அல்லது இடையூறுகள் எவையுமின்றி தேர்தல்கள் நடந்து முடிந்தன.

அதாவது வாக்கெடுப்பு நிலையங்களில் முறையற்ற நடத்தைகள் எவையும் நிகழ்ந்ததாக வாக்கெடுப்பு நிலைய அலுவலர்களோ, உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களோ, பொலிஸ் அலுவலர்களோ அல்லது கண்காணிப்பாளர்களோ அறிவித்திருக்கவில்லை. வாக்கெண்ணல் நிலையங்கள் அநுராதபுரம் 48, பொலநறுவை 24, இரத்தினபுரி 50, கேகாலை 48 , மொத்தமாக 170 ஆகக் காணப்பட்டன.

வடமத்திய மாகாண சபைக்கு ஐக்கிய மக்கள்சுதந்திரக் கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, தேசிய காங்கிரஸ், ஐக்கிய சோசலிச கட்சி, ஐக்கிய தேசியக்கூட்டமைப்பு, இடதுசாரி முன்னணி, தேசிய மக்கள் கட்சி, ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி, சிங்களயே மஹ சம்மத பூமிபுத்ர பக்சய, ருஹுணு ஜனதா பக்சய, முஸ்லிம் விடுதலை முன்னணி, சுயேச்சை குழு ஆகியன போட்டியிட்டன.

(தொடரும்...)

## மாணவர்களுக்கு...

நடைபெற்ற செயலணிக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

2020ஆம் ஆண்டில் மூன்று மாதங்களுக்கும் மேலாக நாடு மூடப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் வரலாற்றில் முதல் முறையாக எதிர்மறையான திருப்பத்தை எடுத்தது.

ஒரு சிறிய பொருளாதாரம் கொண்ட நாடு என்ற முறையில், அனைத்துத் தரப்பினரும் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு பொருளாதாரத்தைப் பாதுகாக்க, முன்னேற பொறுப்புள்ள முடிவுகளை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

உலகின் பல நாடுகள் சுற்றுலாத் துறைக்குத் திறந்திருக்கின்றன.

அதே நேரத்தில், முடிவெடுப்பதில் வெற்றிகரமான முடிவுகளுக்கான சாத்தியங்களை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கோவிட்-19 நோய்த்தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான சுகாதாரப் பரிந்துரைகளை விரைவாக வழங்குமாறு சுகாதார பிரிவுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். (ம-3)

## 3,644 பேருக்கு...

சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அதன்படி நேற்று கொரோனாத்தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 3,644 ஆக உயர்வடைந்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 451,401 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,998 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத்தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 380,166 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## 10 ஆயிரத்தை...

திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 9,806 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 89 பெண்களும் 113 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-3)

## கோவிட்டால்...

டுள்ளதுடன், இருவர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பீசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 148 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், வவுனியாவில் கோவிட் தொற்றுக் காரணமாக இருவர் மரணமடைந்துள்ளனர். வவுனியாவின் தேக்கவத்தை மற்றும் தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 61 மற்றும் 76 வயதுடைய இருவரே இவ்வாறு மரணமடைந்துள்ளனர்.

மரணமடைந்தவர்களின் உடல்களை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றித் தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-3,250,299)

## இராணுவம்...

வித ஐயமும் இருக்க முடியாது. இராணுவம் என்றால் என்ன என்பதை இனி சிங்கள மக்கள் அறிந்து கொள்வார்கள்"

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

2243/1 அதிவிசேட வர்த்தமானி மூலம் கோவிட் 19ஐக் காரணம் காட்டி அவசரகால நிலையை அறிவித்துள்ளார் ஜனாதிபதி.

உண்மையில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டம் அனர்த்த முகாமைத்துவச் சட்டம். அதன்கீழ் ஒரு செயலணியை நிறுவி மருத்துவ ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலிருந்து ஜனாதிபதி ஆரம்பத்திலேயே தவறிவிட்டார். பல குற்றங்களை அவர் புரிந்துள்ளார்.

1. இவ்வாறான அனர்த்த முகாமைத்துவ செயலணியை இதுவரையில் நியமிக்காமை.
2. கோவிட்-19க்கு எதிரான நடவடிக்கைகளை துறைசார் நிபுணர்களை வைத்து இதுவரையில் கட்டுப்படுத்தாதது.
3. ஆயுதமேந்தி மக்களைக் கொல்லும் இராணுவத்தை கோவிட்டைக் கட்டுப்படுத்த நியமித்தமை.
4. கோவிட்டைக் காரணம் காட்டி அவசரகால நிலையை ஏற்படுத்தி சர்வாதிகாரத்திற்கு வித்திட்டமை.

ஏற்கெனவே பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலில் உள்ளது. அடுத்து கோவிட்-19ஐக் கட்டுப்படுத்த இராணுவத்தை அழைத்து அவர்கள் எங்கும் வியாபித்திருக்கின்றார்கள். மூன்றாவதாக அவசரகாலச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளார்.

தமக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழ ஆயத்தமாகின்றார்கள் என்பதை அறிந்து கொண்டு அவர்களை அடக்கி ஆள அவசரகாலச் சட்டத்தை உபயோகித்துள்ளார்.

இது சர்வாதிகாரத்திற்கு முக்கியபடி என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது. இராணுவம் என்றால் என்ன என்பதை இனி சிங்கள மக்கள் அறிந்து கொள்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## செப்ரெம்பர்...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்று முற்பகல் வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கோவிட் ஒழிப்புக்கான விசேட கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

மாகாண மற்றும் பிரதேச சுகாதாரப் பணிப்பாளர்களும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கோவிட் ஒழிப்பு தொடர்பில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களை முன்வைத்தனர்.

தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டதுடன் 20-29 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையை எதிர்வரும் இரண்டு வார காலப்பகுதிக்குள் முன்னெடுப்பதற்கான தேவை தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்படும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவிய சுகாதார, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும் ஜனாதிபதி தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

நாளாந்தம் 400 - 450க்கு இடைப்பட்ட தடுப்பூசி நிலையங்களில் தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

சுகாதாரத்துறையினரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, தடுப்பூசி நிலையங்களுக்கான தடுப்பூசித் தொகை தீர்மானிக்கப்படுகிறது.

இருப்பினும், ஒட்டுமொத்தமாக முன்னெடுக்கப்படும் தடுப்பூசி ஏற்றல் பணிகளைப் புறந்தள்ளிவிட்டு, ஓரிரு தடுப்பூசி நிலையங்களில் இடம்பெறும் சில சம்பவங்களைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்கு ஊடகங்கள் முன்னெடுக்கும் முயற்சிகள் கவலைக்குரியனவாக உள்ளனவென்று மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

தடுப்பூசி ஏற்றலின்மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றியுடன், புதிய பொதுமைப்படுத்தல் முறைமைக்கு ஏற்ப, நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்வதன் அவசியம் பற்றி ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் உள்ள போதிலும், தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் வெற்றியுடன், ஏற்றுமதித்துறையில் ஈடுபடும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடிந்தமையானது, பொருளாதாரத்துக்குக் கிடைத்த பெரிய ஆறுதலாக உள்ளதென்று நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார். (ம-3)

## 24 மணி...

பிரிவில் 27 பேரும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 20 பேரும் சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 19 பேரும் ஊர்காவற்றுறையில் 9 பேரும் நல்லூரில் 26 பேரும் சண்டிலிப்பாயில் 7 பேரும் உடுவிலில் 35 பேரும் தெல்லிப்பழையில் 7 பேரும் வேலணையில் 6 பேரும் மருதங்கேணியில் 14 பேரும் காரைநகரில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2020 மார்ச்சிலிருந்து நேற்று மாலைவரை 13 ஆயிரத்து 310 பேர் கோவிட் - 19 நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கோவிட் - 19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்ட 82 வயதுடைய முதியவர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மாங்குளத்தைச் சேர்ந்த 79 வயதுடைய ஆண் ஒருவரும் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

நெல்லியடி கரணவாயைச் சேர்ந்த 52 வயதுடைய ஆண் ஒருவர் மந்திகை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் உயிரிழந்ததாக மருத்துவச் சான்றிதழ் வழங்கப்பட்டது. அவரது சடலத்தில் முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கோவிட்-19 தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் இயற்றாலையைச்சேர்ந்த 86 வயதுடைய பெண் ஒருவரும் நுணாவில் கிழக்கைச் சேர்ந்த 90 வயதுடைய பெண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். (ம-3,18,33,60)

## தையிட்டியில்...

பிடிக்கப்பட்டது.

குறித்தகாணிஉரிமையாளர்காணியை சுத்தம் செய்யும்போதே குறித்த மோட்டார் குண்டு அவதானிக்கப்பட்டது.

பலாலி பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து அதனை இன்றைய தினம் மீட்பதற்கு பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,104)

## முல்லையில்...

சோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில்,

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 73 பேர்**

புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 65 பேர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் 04 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 03 பேர், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

**யாழ். மாவட்டத்தில் 39 பேர்**

யாழ். போதனா வைத்தியசாலையில் 12 பேர் (உயிரிழந்த ஒருவர் உட்பட), கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 12 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 05 பேர், தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 04 பேர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் 04 பேர், யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**மன்னார் மாவட்டத்தில் 07 பேர்**

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 03 பேர், முசலிசுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர், மன்னார் கடற்படை முகாமில் 02 பேர்.

**வவுனியா மாவட்டத்தில் 05 பேர்**

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 03 பேர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் 02 பேர்.

கிளிநொச்சிமாவட்ட வைத்தியசாலையில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## டிசம்பர் மாத...

இல்லை. இன்னும் நீண்ட தூர சவால் மிக்க பயணத்தை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 70 தொடக்கம் 80 சதவீத மக்களுக்கு தடுப்பூசி ஏற்றினால் மட்டுமே பாதுகாப்பை உணர முடியும் எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து கொழும்பு பல்கலைக்கழக வைத்திய பீட பேராசிரியர் மனோஜ் வீரசிங்ஹ கூறுகையில்,

இலங்கையைப் பொறுத்தவரையில் கோவிட் வைரஸ் பரவலை சமாளிக்கும் முறையான வேலைத்திட்டங்களை துரிதமாக முன்னெடுக்கவில்லை என்றே கூற வேண்டும். தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் மிகச் சிறந்த ஒன்றாகும். ஆனால் அதனைத் துரிதப்படுத்த வேண்டும் என்றார். (ம-3)

# மரண அறிவித்தல்



தோற்றம்
24 – 06 – 1950

மறைவு
03 – 09 – 2021

## பாக்கியம் தம்பிராசா

காரைநகர் கருங்காலியைப் பிறப்பிடமாகவும் நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் தம்பிராசா நேற்று (03.09.2021) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - செல்லாச்சி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும் லோகேஸ்வரனின் (ஈசன் - அவுஸ்திரேலியா) அன்புத் தாயாரும் கலைவாணியின் அன்பு மாமியாரும் நாகேஸ்வரி (நாகம்மா), சடாச்சரம், காலஞ்சென்ற கனகம்மா, காலஞ்சென்ற பரமநாதன் மற்றும் மாணிக்கம், தவமணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற பரஞ்சோதி, பொன்னம்மா, காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் உலகநாதன் (சந்திரன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.09.2021) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் நல்லூர் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

இல. 44/16. சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
077 433 9427
தகவல்:- மகன்

நிமிடத்திற்கொரு மரணம்

# மக்களை கடவுளாலும் காப்பாற்ற முடியாது

## யாழ். போதனா வைத்தியர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

நிமிடத்திற்கொரு மரணம் பதிவாவதால் கடவுளாலும் காப்பாற்ற முடியாது என யாழ். போதனா வைத்தியசாலையின் வைத்தியர் ஹரீஸ்வரன் மக்களை எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் காணொளியொன்றை வெளியிட்டுள்ள வைத்தியர் அதில் மேலும், இந்தக் காலத்தில் கடவுள்கூட உங்களைக் காப்பாற்ற முடியாது.

ஏனெனில் ஒரு மரணம் இரு மரணம் என்றால் கடவுளால் காப்பாற்ற முடியும். நிமிடத்திற்கொரு மரணம் பதிவாகின்றமையால் கடவுளாலும் காப்பாற்ற முடியாது. ஒன்றை மாத்திரம் நிச்சயமாய் கூறுகிறேன். உங்கள் மரணங்களுக்கு நீங்கள் தான் பொறுப்பு. நீங்கள் தான் காரணம். வெளியில் நடமாட வேண்டாம் எனக் கூறும் போது அப்போது தான் வெளியில் நடமாடுவது. பக்கத்து வீட்டுக்காரருக்கு கோவிட் இல்லையென முகக்கவசத்தை கழற்றிவிட்டு கதைப்பது.

வீட்டிற்கு வருகின்றவர்களுக்கு கோவிட் தொற்று இல்லையென தேநீர் கொடுத்து உபசரிப்பது. அத்தோடு கோவிட் தொற்றையும் வாங்கிக் கொள்வது. நீங்கள் நீங்களாக உணர்ந்து திருந்தாவிட்டால் இறப்பு நிச்சயம். இந்தியாவில் இருந்து காணொளி வெளியிட்டபோது பயந்து போய் பார்த்துக்கொண்டிருந்தோம்.

ஆனால் இன்றைக்கு இலங்கையில் இரகசியமாக அதாவது அம்பலப்படுத்துவது எப்படியென தெரியாமல் நிறைய இறப்புக்கள் பதிவாகிக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு வார்ட்டிலும் நூற்றுக்கணக்கான மரணங்கள். எனவே நீங்களே உங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இரட்டை முகக்கவசங்களைப் பயன்படுத்துமாறு அவர் அறிவுறுத்தியுள்ளதுடன், முகக்கவசத்தை கழற்றி வீசும் வரையில் அதன் உள் பக்கத்தை கைகளால் தொடுவதை தவிர்க்குமாறும் குறிப்பிட்டுள்ளார். மேலும், கைகளை முறையாக சவர்க்காரமிட்டு கழுவுதல், சமூக இடைவெளிகளை பேணுதல்என்பவை தொடர்பிலும் வலியுறுத்தியுள்ளார்.

(ம-03)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி தெற்கு, கரந்தன் பகுதியில் 5 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு - 1 1/2 பரப்பாகவும் 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம்

**காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை**

(தரகர் தேவையில்லை)

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 814 7389, 077 614 7333**

# கண்ணீர் அஞ்சலி



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும்
தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிறந்த நாதஸ்வர வித்துவான்

**அளவையூர் நாதஸ்வர ஆளுமை**

**கலாபூசணம்**

## செல்லத்துரை சிதம்பரநாதன்

அவர்கள் இறைபதமடைந்த செய்தியறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"மணியோசை"
இல. 383, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(C-2613)

கல்விக் காருண்ணியன்
லயன் E.S.P. நாகரத்தினம் PMJF

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
24
12
1951



ஆண்டவன் அடியில்
14
09
2020

அமரர்

## மகாலட்சுமி கோபாலபிள்ளை

அன்புத்தாயே ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனம்
ஆற்றுவார் யாருமில்லை ஆறுதலைத் தந்திடம்மா!
தாய் இன்றி தந்தை இன்றி உற்றார் யாருமின்றி
நாங்கள் படும் வேதனையை அந்த ஆண்டவனே அறிவான் அம்மா!

ஒரு நிமிடம் கூட உன்னை மறந்திருக்க முடியவில்லை
நினைவிலும் கனவிலும் உன்நினைப்பு எம்மை வருத்துதம்மா!
நீ நடந்த இடமெல்லாம் நிழலாய் உன்முகம் தான்
நீ இல்லை என்றெண்ண எம் நெஞ்சு வெடிக்குதம்மா!

எம் உள்ளம் உருகுதம்மா விழிகளில் கண்ணீர் பெருகுதம்மா!
எம்மை உருவாக்கிவிட்ட தாயே உனையினி காண்பதெங்கே?
எப்போதும் எம்கூட துணையாக இருந்தாயே
இப்போது போனதெங்கே திரும்பி நீ வந்திடம்மா!

" தாயகம் "
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

(7849)

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அச்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.